ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

பராசரவிசிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம்.

இச்சபாபண்டிதரான

சிங்கப்பெருமாள்கோவில்

ஸ்ரீமான் - மாடபூசி

தர்க்கதீர்த்தர் - ராமாநுஜாசார்யரால்

எழுதப்பட்ட தாத்பர்யஸஹிதம்

அநேக தேசாநீத ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினல்

லேககப்ரமாதாதி ஜநிததோஷங்களில்லாமல்

மேற்படி

ராமாநுஜாசார்யராலும்

வி - முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்) யாரால்

சென்னப்பட்டணம்,

ஸ்ரீநிகேதநமுத்ராக்ஷரசாலையில்

ஸ்ரீபராங்குசதிருவவதாராதி ௫௦௨.

ப்லவஸம்வத்ஸரத்தில்

பதிப்பித்துப் ப்ரசுரம் செய்யப்பட்டது.

௧௯௦௧.

விஜயதேதராம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

1882 - ஞூத்திய ஆறுவது ஆக்ட்டுப்ரகாரம் ரிஜிஸ்டர் செய்து ஸ்தாபிக்கப்பட்டது.

ப்ரதிமாதம் 5 - பாரங்களுக்குக் குறையாமல் சாஸ்வதமாய் அச்சிட்டு மூன்றுசலெமுறைகளுக்கு பேட்ரன்களுக்கு 12 - காபிகளும், பாகஸ்தர்களுக்கு 5 - காபிகளும் போஷகர்களுக்கு 1 - காபியும் ப்ரதிமாதம் கொடுக்கப்படும்.

பேட்ரன் சந்தா ரூபாய் - 200, பாகஸ்தர்களுக்கு சந்தா ரூபா 100, போஷகர்களுக்கு சந்தா ரூபா - 20 - மொத்தமாயாவது ப்ரதி இங்கிலீஷ்மீ 15வ க்குள் 10-ல் ஒருபாகமாயாவது கட்டவேண்டும். இவர்களுக்குப் ப்ரவேசவர்த்தனேக்ரமமாக ரூபா 2-0-0, ரூபா, 1-0-0, ரூபா, 0-4-0.

மற்ற விவரங்களெல்லாம் சட்டபுஸ்தகத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். இதின் விலே, அணு 2.

இந்த ஸபையாரால் இதுவரையில் அச்சிட்டு ப்ரசுரம்செய்யப்பட்ட க்ரந்தங்கள்

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம்ப்ரதிபததாத்பர்யஸஹிதம்மேலான காகிதம் தமிழ்லிபி		3—4—0
பாரதாதிதனிஸ்லோகம்		0—5—0
பராசரவிசிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம் தாத்பர்யஸஹிதம்		0--14—0
ராமசரமஸ்லோகம் ஸவ்யாக்யாநம்	டிடொ	0—3—0
இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபதடீகா அரும்பதஸஹிதம்	டிடொ	1—2—0
டிடொ இரண்டாம்திருவந்தாதி	டிடொ டிடொ	0--12—0

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம் ப்ரதிபததாத்பர்யஸஹிதம்உயர்ந்த காகிதம் தெலுங்குலிபி		3—4—0
ராமசரமஸ்லோகம்	டிடொ	0—3—0
பாரதாதி தனிஸ்லோகம்	டிடோ	0—5—0
இயல்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபதடீகா அரும்பதஸஹிதம்		1—3—0
டிடொ இரண்டாந்திருவந்தாதி	டிடொ	0-12—0

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்ய.

கார்யதர்சி - தனதிகாரி,

கெ 31, வெங்கடாசலமுதலிதெருவு, சென்னே.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை,
(லிமிடெட்).

பராசரவிசிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம்.

பீடிகை,

(:O:

இந்த க்ரந்தம் பராசரமஹர்ஷி ப்ரணீதமான பாராசரஸ்ம்ருதியில் உத்தரபாகம். வேதத்தில் பூர்வபாகத்தில் யஜ்யம்முதலான ஸாமாந்ய தர்மங்களை விதித்து மேல்பாகத்தில் மோக்ஷத்துக்கு ஹேதுவாகப் பரமாத்மஸ்வரூபரூபகுண விபூதிகளையும் பக்தியையும் விதித்தது போல் முதல்பாகத்தில் வர்ணாஶ்ரமாசாரங்களை உபபாதித்து மேல்பாகமான இந்த க்ரந்தத்தில் நிர்துஷ்டமாய் ஸர்வோத்க்ருஷ்டமான பரமைகாந்தி தர்மத்தை உபபாதிக்கிறபடியினால் இதற்கு விசிஷ்ட பரம தர்மசாஸ்த்ரம் என்று பெயர். ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்கிற மூன்றுவகைகளில் இந்த ஸ்ம்ருதியை மத்ஸ்யபுராணத்திலும் பத்மபுராணத்திலும் ஸாத்விகத்திற் சேர்த்திருக்கிறது. ஒருவகைப் பட்டதை மற்றொரு வகைப்பட்டதாக வறிவிக்கையின்றிக்கே வஸ்துவின் ஸ்வரூபத்தை உள்ளபடி யறிவிக்கிற க்ரந்தமே ஸாத்விகமெனப்படும்.

இந்த க்ரந்தகர்த்தாவான பராசரமஹர்ஷியை மிகவும் ப்ராமாணிகராக வேதத்திற் சொல்லியிருக்கிறது. மேலும், இவருடைய தகப்பனரான சக்தி என்கிற மஹர்ஷியை விஸ்வாமித்ரரா லேவப்பட்ட ஒரு ராக்ஷஸன் பக்ஷித்துவிட்டான்; அதை இவர் கேட்டு இவ்வுலகில் ராக்ஷஸர்களில்லாமற் செய்து விடுகிறேனென்று ஒரு யாகம் செய்தார்; அந்த யாககுண்டத்தில் இவருடைய மந்த்ரசக்தியினால் அனேகம் ராக்ஷஸர்கள் வந்து விழுந்து மாண்டுபோனர்கள்; இந்த அநர்த்தத்தை இவருடைய பிதாமஹரான வஸிஷ்டமஹாமுனிவர் பார்த்து, அப்பா! உம்முடைய தகப்பனர் தம் விதியினால் மாண்டார்; அதற்கு ராக்ஷஸர்கள்மேல் என்ன குற்றம்? கோபமென்பது புருஷனைக் கெடுத்துவிடும். ஆகையால் நீர் ராக்ஷஸர்கள்மேல் கோபிக்கக்கூடாது; என்று உபதேசிக்க, அதை அப்படியே அங்கீகரித்து அந்த யாகத்தை நிறுத்திவிட்டார். அப்பொழுது புலஸ்த்யர் வந்து,

என்னுடைய வம்சத்தை யழித்து விடாமல் காப்பாற்றினபடியால் உமக்கு ஸகலமான வாஸ்தவார்த்தங்களும் செவ்வையாய் ப்ரகாசிக்குமென்று வரங்கொடுத்தார். பின்பு வஸிஷ்டமஹாமுனியும் தான் சொன்னதை யங்கீகரித்ததற்காக ஸந்தோஷித்து அதே வரத்தைக் கொடுத்தார். எம்பெருமானுடைய ஸிம்ஹாஸநாம்சமாய் பரமாசார்யரான ஆளவந்தாரும் இவர் செய்த உபகாரத்தைப் பற்றித் தாம் செய்தருளின ஸ்தோத்ரரத்நத்தின் முதலில் இவர்க்கு ப்ரணாமம் பண்ணி, திருநாட்டுக்கெழுந்தருளுங் காலத்தில், பரமோபகாரகரான இவருடைய திருநாமத்தை தர்சநப்ரவர்த்தகரான ஒருவருக்கிட்டு மறவாமற் செய்திலோமே என்னுங் குறையுடன் திருநாட்டுக்கெழுந்தருளினார். அக்குறையை தர்சநப்ரவர்த்தகரான ஆழ்வான் திருக்குமாரருக்கு ஸ்ரீபராசரபட்டரென்று திருநாமஞ்சாத்தி எம்பெருமானார் தீர்த்தருளினார். ஆகையால் இவர் ஸகல வாஸ்தவார்த்த வேத்தாவுமாய் ப்ராமாணிகருமாகையாலே இவர்செய்த இந்த க்ரந்தம் எல்லா க்ரந்தங்களிலும் ஆப்ததமமாக சிஷ்டர்களா லங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இவர் நாஸ்திகர் முதலான குத்ருஷ்டிகளுடைய குயுக்திகளைத் தம்முடைய ஸத்யுக்தியினால் கண்டித்து அவர்களை நசிப்பித்தபடியால் பராசரரென்னுந் திருநாமத்தையுடையரானார். இவர் செய்தருளின க்ரந்தங்கள்: பராசரஸம்ஹிதை, புராணரத்நமான ஸ்ரீவிஷ்ணுபுராணம், இந்த பராசரஸ்ம்ருதி என்பவைகளாம். இவைகளேப்ரஸித்தமாகக் காணவருகின்றன. இவருடைய தகப்பனார், வஸிஷ்டமஹாமுனியின் குமாரராகிய சக்தி என்னும் மஹர்ஷி; இவர் குமாரர், சுகமஹாமுனிவருடைய தகப்பனாரான ஸ்ரீவேதவ்யாஸபகவான். இவர் மைத்ரேயர் முதலான அனேகம் சிஷ்யர்களுக்குப் பரமார்த்தங்களையுபதேசித்து அவர்களடியாக ஜகத்தை வாழ்வித்துக்கொண்டு இந்த கலியுகத்திறுதி வரையிலும் நெடுங்காலம் எழுந்தருளியிருந்தார்.

இப்படிக்கு,

ஸபாபண்டிதர்கள்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பராசர விசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம்.

க-வது அத்யாயம்.

మునయ ఊచుః.

విస్తరేణ సమాఖ్యాహి హరిసంశ్రయణమ్పరమ్ ।
కథ మాశ్రయణన్నౄణాఙ్కథమారాధనం విభోః ॥ ౧.

முநய ஊசு:.

விஸ்தரேண ஸமாக்யாஹி ஹரிஸம்ஸ்ரயணம்பரம் |
கதமாஸ்ரயணம்ந்ருணாம் கதமாராதநம் விபோ: || க.

தா-ம். மைத்ரேயர் முதலான ருஷிகள் ஸ்ரீபராசரபகவானிடம் சென்று ஸாமாந்ய தர்மங்களைக் கேட்டறிந்து, அவைகள் ஸாக்ஷாத் மோக்ஷஸாதநங்களல்லாமையால் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்துக்கு நேரே ஸாதநமான பகவத் ஸமாஸ்ரயணத்தைக் கேட்க விரும்பி அவரை ப்ரார்த்திக்க, தத்ப்ரஸ்நோத்தரரூபமாக ப்ரவ்ருத்தமாயிருக்கிறதிந்த ஸந்தர்ப்பம்.—ருஷிகள் சொல்லுகிறார்கள்.—நம்விரோதிகளைப்போக்கி இஷ்டத்தை யளிக்க ஸமர்த்தனான ஸர்வேஸ்வரனை ஆஸ்ரயிக்கும் விதமும் அதினங்கங்களும் ஆஸ்ரயித்தவநந்தரம் செய்யும் ஆராதநவிதிகளும் ஆகிய இந்த உத்க்ருஷ்ட தர்மங்களை நாங்களறியும்படி பரக்கச்சொல்லி யருளீர். க

శ్రీపరాశర ఉవాచ.

వక్ష్యామి మునయస్సర్వే విష్ణో రాశ్రయణక్రియామ్।
మన్త్రదీక్షా విధిఞ్చైవ తస్య పూజావిధి న్తథా ॥ ౨.

ஸ்ரீபராசர உவாச.

வக்ஷ்யாமி முநயஸ்ஸர்வே விஷ்ணோ ராஸ்ரயணக்ரியாம் |
மந்த்ர தீக்ஷா விதிஞ்சைவ தஸ்ய பூஜாவிதிம்ததா || உ.

தா-ம். ருஷிகள் இப்படி ப்ரார்த்திக்க ஸ்ரீபராசரபகவான்சொல்லுகிறார்.—ருஷிகளே! ஸர்வ வ்யாபகனான ஸர்வேஸ்வரனை ஆஸ்ரயிக்கும் க்ரமத்தையும், அதற்கங்கமான மந்த்ரத்தையும், மற்றுமுண்டான வ்ரதங்களையும், ஆராதநப்ரகாரத்தையும் நீங்களெல்லாருமறியும்படி சொல்லப்போகிறேன்; கேளுங்கள். உ.

ఆద్యన్తు శఙ్ఖచక్రాది ధారణం వైష్ణవం స్మృతమ్ ।
పుణ్డ్రం నామక్రియా చైవ మన్త్రశ్చైవార్చనం హరేః ॥ 3.
సంస్కారాః పఞ్చకర్తవ్యా బ్రాహ్మణస్య విధానతః ।

ஆத்யந்து சங்கசக்ராதி தாரணம் வைஷ்ணவம் ஸ்ம்ருதம் |
புண்ட்ரம் நாமக்ரியாசைவ மந்த்ரஸ்சைவார்ச்சநம் ஹரே:|| ௩.
ஸம்ஸ்காரா: பஞ்சகர்த்தவ்யா ப்ராஹ்மணஸ்ய விதாநத:|

தா-ம். பகவத் ஸமாஸ்ரயண மாவது:—முதலாவது—ஒரு ஸேவகன் தன்னை இன்னார் மனுஷ்யனென்று பிறரறிகைக்காகத் தன் எஜமானனுடைய அடையாளத்தைத் தரிப்பதுபோல் ஸ்ரிய: பதியினுடைய தாஸரான நாமும் அவனுடைய ஆயுதங்களான சங்கம்சக்ரம் முதலானவைகளைத் தரித்தல். இரண்டாவது— சேஷியான அவனுடைய பாதாக்ருதியான ஊர்த்வ புண்ட்ரத்தை உத்தமாங்கமானமுகத்தில் தரித்தல். மூன்றாவது—ஸ்வாமியான அவனுடைய ஸம்பந்தியான திருநாமத்தைதாஸபதத்தைச்சேர்த்துத் தரித்தல். நாலாவது—அவனுக்கும் நமக்கு முண்டான ஸம்பந்தத்துக்கும் உபாயோபேயங்களுக்கும்வாசகமான மந்த்ரத்தை அநுஸந்தித்தல். ஐந்தாவது—தன்னுடைய அடிமை ஸித்திக்கைக்காக ஸ்ரிய:பதியை யாராதித்தல். ஆக முக்தி யடைவதற்கு யோக்யதையை ஸம்பாதித்துக் கொடுக்கும் இவையைந்தும் வேதசாஸ்த்ராகமாதிகளிற் சொன்னக்ரமப்படி ப்ராஹ்மணாதி வர்ணங்களிலுள்ளவர்களுக்கு அவஸ்யம் அநுஷ்டிக்கத்தக்க பஞ்ச ஸம்ஸ்காரங்களாம். ௩உ.

వినా యజ్ఞోపవీతేన వినా చక్రస్య ధారణాత్ ॥ ௪.
వినా ద్వయేనవై విప్రశ్చణ్డాలత్వ మవాప్నుయాత్ ।

விநா யஜ்ஞோபவீதேந விநாசக்ரஸ்ய தாரணாத் || ௪.
விநாத்வயேநவை விப்ரஸ்சண்டாலத்வ மவாப்நுயாத் |

தா-ம். சக்ரதாரணம் என்கிற தாப ஸம்ஸ்காரமும், த்வயாநுஸந்தாநம்என்கிற மந்த்ர ஸம்ஸ்காரமும் இல்லாதவன், பூணூலில்லாதப்ராஹ்மணன்போல் நீசனுவான். ௪உ.

విధినా శఙ్ఖచక్రాది ధారణఞ్చోర్ధ్వపుణ్డ్రకమ్॥ ௫.
ఉపవీతం శిఖాబన్ధం విప్రస్య సతతం స్మృతమ్ ।
చక్రలాఞ్ఛనహీనస్య విప్రత్వం నిష్ఫలం భవేత్ ॥ ௬.

விதிநாசங்க சக்ராதி தாரணஞ் சோர்த்வ புண்ட்ரகம் ॥ ரு.

உபவீதம் சிகாபந்தம் விப்ரஸ்ய ஸததம் ஸ்ம்ருதம் ।
சக்ரலாஞ்சந ஹீநஸ்ய விப்ரத்வம் நிஷ்பலம் பவேத் ॥ சு.

தா-ம். சாஸ்த்ரத்திற் சொல்லிய க்ரமப்படி சங்க சக்ரங்கள் முதலியஆயுதங்களைத் தப்தம் செய்து தரித்தல், ஊர்த்வ புண்ட்ரம், பூணூல், சிகை, இவைகளையும் ஸர்வகாலத்திலு மணிதல் ப்ராஹ்மணனுக்கு ஆவஶ்யகமென்று தர்மசாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டது. எவனுடைய சரீரத்தில் திரு வாழியின் சிஹ்ந மில்லையோ? அவனுடைய ப்ராஹ்மணத்வம் ஒரு பலத்தையும் கொடுக்காது. இத்தால், ஸமாஶ்ரயண மில்லாதவன் தாநம் முதலானவை வாங்க யோக்யனன்றென்கிறது. சு.

అచక్ర ధారిణం విప్రం యశ్శ్రాద్ధే భోజయేన్నరః ।
రేతో మూత్ర పురీషాదీన్ సపితృభ్యః ప్రయచ్ఛతి ॥ ౭.

அசக்ரதாரிணம் விப்ரம் யஶ்ஶ்ராத்தே போஜயேந்நரஃ ।
ரேதோ மூத்ர புரீஷாதீந் ஸபித்ருப்யஃ ப்ரயச்சதி ॥ எ.

தா-ம். சக்ராங்கந மில்லாத ப்ராஹ்மணனை எந்தப் புருஷன் ஶ்ராத்தத்தில் நிமந்த்ரித்து போஜநம் செய்விக்கிறானோ; அவன் தன் பித்ருக்களுக்கு சுக்லம், மூத்ரம், அமேத்யம், இவை முதலான நிஷித்தங்களைக் கொடுத்தவனாகிறான். அவர்களுக்குக் கொடுத்தது தீமையையே விளைக்குமென்றபடி. எ.

శఙ్ఖ చక్రోర్ధ్వపుణ్డ్రాది రహితో బ్రాహ్మణాధమః ।
స జీవన్నేవ చణ్డాల స్సర్వకర్మబహిష్కృతః ॥ ౮.

சங்க சக்ரோர்த்வ புண்ட்ராதி ரஹிதோ ப்ராஹ்மணாதமஃ ।
ஸஜீவந்நேவ சண்டாள ஸ்ஸர்வ கர்ம பஹிஷ்க்ருதஃ ॥ அ.

தா-ம். சங்கசக்ர ஊர்த்வ புண்ட்ரதாரணங்கள் முதலானபஞ்ச ஸம்ஸ்கார மில்லாத ப்ராஹ்மணன், தன் ஜாதியில் தாழ்ந்து இந்த ஜந்மத்திலேயே நீசனாய் யாதொருவைதிக கர்மத்துக்கும் உபயோகியாக மாட்டான். அ.

తస్మాచ్చక్రాది సంస్కారాః కర్తవ్యాముని సత్తమాః ।
చక్రలాఞ్ఛన హీనేన కృతం కర్మ చ నిష్ఫలమ్ ॥ ౯.

தஸ்மாச்சக்ராதி ஸம்ஸ்காரா: கர்த்தவ்யா முநிஸத்தமா:|
சக்ர லாஞ்சந ஹீநேந க்ருதம் கர்மச நிஷ்பலம்|| ௯.

தா-ம். ருஷிகளே! சக்ரதாரண மில்லாதவன் செய்த கர்மம் பலமின்றியே யொழியு மாகையால் பஞ்ச ஸம்ஸ்காரங்களை அவஸ்யம் செய்துகொள்ளவேணும். ௯.

தாபஸம்ஸ்காரத்தின் க்ரமம்.

స్నాత్వా శుభేహ్ని పూర్వాహ్ణే సమ్యగభ్యర్చ్య కేశవమ్।
స్నాతం శిష్యం సమాహూయ కృతకౌతుక మఙ్గళమ్॥ ౧౦.
ఆచార్యో విధివత్కుర్యాచ్చక్ర పుణ్డ్రాది సత్క్రియామ్।

ஸ்நாத்வா சுபேஹ்நி பூர்வாஹ்ணே ஸம்யகப்யர்ச்யகேசவம்|
ஸ்நாதம் சிஷ்யம் ஸமாஹூயக்ருதகௌதுக மங்களம் || க0.
ஆசார்யோவிதிவத்குர்யாச் சக்ரபுண்ட்ராதிஸத்க்ரியாம்|

தா-ம். சுபமான திதி வாரம் முதலானவைகளோடு கூடின திநத்தில் ஆசார்யன் முதல் யாமத்தில் ஸ்நாநம் முதலான நித்ய கர்மங்களை யநுஷ்டித்து பகவானுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்துப், பின்பு ஸ்நாநம் பண்ணி, பரிசுத்தனா யிருக்கிற சிஷ்யனை யழைத்து, கங்கணங்கட்டி சாஸ்த்ர விதிப்படி பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்யக்கடவன். கஉ0.

కారయేచ్ఛఙ్ఖ చక్రాది హేతిప్రతికృతీ శ్శుభాః॥ ౧౧.
స్వర్ణ రాజత తామ్రాది ద్రవ్యైః కుర్యాద్యథోచితమ్।

காரயேச்சங்க சக்ராதி ஹேதிப்ரதிக்ருதீஸ்ஸுபா: || கக.
ஸ்வர்ணராஜத தாம்ராதித்ரவ்யை: குர்யாத்யதோசிதம்|

தா-ம். ஸமாஸ்ரயணத்துக்காக ஸுவர்ணத்தினாலாவது, வெள்ளியினாலாவது, தாம்ரத்தினாலாவது, தன்னுடைய சக்திக்குத் தக்கபடி சங்கசக்ரம் முதலான ஆயுதங்களின் ப்ரதிமைகளை அழகாயிருக்கும்படி செய்விக்கவேண்டியது. ககஉ.

శఙ్ఖంచక్రం గదాం ఖడ్గం శార్ఙ్గం పఞ్చాయుధం క్రమాత్॥ ౧౨.
స్నాప్య పఞ్చామృతై శ్శుద్ధైః పూజయేత్పురతో హరేః।
తత్తత్ప్రకాశకైర్మన్త్రైః పూజయేత్కుసుమాదిభిః॥ ౧౩.

சங்கம்சக்ரம் கதாம்கட்கம் சார்ங்கம் பஞ்சாயுதம் க்ரமாத் || கஉ.
ஸ்நாப்ய பஞ்சாம்ருதைச்சுத்தைః பூஜயேத்புரதோஹரே: |
தத்தத்ப்ரகாச கைர்மந்த்ரைః பூஜயேத்குஸுமாதிபி:|| கங.

தா-ம். சங்கம், க. சக்ரம், உ. கதை, ங. கட்கம், (நந்தகமென்னும் கத்தி), ச. தநுஸ்ஸு, ரு. என்கிற பகவானுடைய இந்த ஐந்தாயுதங்களுக்கும் க்ரமமாகப் பரிசுத்தமாய்ச்சேர்த்திருக்கும்பஞ்சாம்ருதத்தைக் கொண்டு திரு மஞ்சனம் செய்து, அவ்வவ ஆயுதங்களின் ப்ரபாவங்களை நன்று யுரைக்கும் மந்த்ரங்களை யநுஸந்தித்துக் கொண்டு புஷ்பம் தூபம் தீபம் முதலானவைகளால் பகவானுக்கு முன்னே அவைகளுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பிக்கவேண்டியது. கங.

పురతోఽగ్నిం ప్రతిష్ఠాప్య స్వగృహ్యోక్త విధానతః।
ఇధ్మాధానాది పర్యన్తం తాంబూలఞ్చ నివేదయేత్ ॥ ౧౪.

புரதோக்நிம் ப்ரதிஷ்டாப்ய ஸ்வக்ருஹ்யோக்த விதாநத: |
இத்மாதாநாதி பர்யந்தம் தாம்பூலஞ்ச நிவேதயேத் || கச.

தா-ம். பின்பு தன் முன்னிலையில் அக்நிப்ரதிஷ்டை பண்ணி, அந்த அக்நியில் தங்கள்தங்களுடையக்ருஹ்யம் என்கிற அநுஷ்டாந ப்ரகாசகமான கல்பஸூத்ர விதி ப்ரகாரம் ஸமித்ஹோமம்முதல் தாம்பூல நிவேதநம்வரையிலானஹோமங்களைமுடிவுவரையில் நடத்தவும்.

పశ్చాత్పఞ్చాయుధాన్యగ్నౌ ప్రక్షిప్యచ యథావిధి।
జుహుయాద్ధేతి మన్త్రైశ్చ శిష్యేణ సహితో గురుః ॥ ౧౫.
నమస్కుర్యాత్తతో భక్త్యా దేవదేవం జనార్దనమ్।

பஶ்சாத் பஞ்சாயுதாந்யக்நௌ ப்ரக்ஷிப்யச யதாவிதி |
ஜுஹுயாத்தேதி மந்த்ரைஶ்ச ஶிஷ்யேண ஸஹிதோ குரு:||கரு.
நமஸ்குர்யாத் ததோ பக்த்யா தேவதேவம் ஜநார்த்தநம் |

தா-ம். பிறகு அந்த அக்நியில் ஐந்து ஆயுதங்களையும் வைத்து அந்த ஆயுதங்களின் மஹிமையை ப்ரதிபாதிக்கிற மந்த்ரங்களினால் ஆசார்யன் ஹோமம் செய்து, அநந்தரம் ஶிஷ்யனோடு கூடி தேவாதி தேவனை ஶ்ரிய:பதியை பக்தியுடன் நமஸ்கரிக்கக்கடவன். கரு.

ప్రాఙ్ముఖన్తు సమాసీనం శిష్యం మన్త్రిజలాప్లుతమ్ ॥ ౧౬.
ప్రతపేచ్ఛఙ్ఖ చక్రాది హేతిభిః ప్రయతో గురుః।
పవిత్రే నాజ్యయేత్పూర్వం బాహుమూలన్తు దక్షిణమ్॥ ౧౭.

శజ్ఞేన ప్రతపేత్సవ్యం గదయా ఫాల మధ్యమమ్ ।
తథాఖడ్గేన హృదయం శార్ఙ్గేణైవతు మస్తకమ్ ॥ ౧౮.
ప్రతప్య విమలాకారై స్నాపయిత్వ పఞ్చామృతైర్గురుః ।
సంపూజ్య పూర్వవత్పశ్చాద్ధోమ శేషం సమాపయేత్॥ ౧౯.

ப்ராங்முகந்து ஸமாஸீநம் சிஷ்யம் மந்த்ரஜலாப்லுதம் || கசு.

ப்ரதபேச்சக்ர சக்ராதி ஹேதிபி: ப்ரயதோகுரு: |
பவித்ரேணாங்க யேத்பூர்வம் பாஹுமூலந்து தக்ஷிணம்|| கஎ.

சங்கேந ப்ரத பேத்ஸவ்யம் கதயாபால மத்யமம் |
ததாகட்கேந ஹ்ருதயம் சார்ங்கேணைவது மஸ்த்தகம் || கஅ.

ப்ரதப்ய விமலாகாரைஸ் ஸ்நாப்ய பஞ்சாம்ருதைர்குரு: |
ஸம்பூஜ்ய பூர்வவத் பஸ்சாத்தோம சேஷம்ஸமாபயேத்|| ககூ.

தா-ம். குடம் முதலானபாத்ரத்தில் ஜலத்தை நிறைத்து அதை மந்த்ரித்து அஜ்ஜலத்தினால் சிஷ்யனை ஸ்நாநம் செய்வித்து கிழக்கு நோக்கி உட்காரச் செய்து, ஆசார்யன் ஜாக்ரதையா யிருந்து அக்நியில் தப்தம் செய்யப்பட்ட ஆயுதங்களை எடுத்து க்ரமமாக, சக்ரத்தினால் வலது புஜத்தையும், சங்கத்தினால் இடது புஜத்தையும், கதையினால் நெற்றியையும், கட்கத்தினால் மார்வையும், சார்ங்கத்தினால், சிரஸ்ஸையும் சிஹ்ந மிருக்கும்படியாக அஜ்ஞாநத்தைப் போக்காநின்ற இந்த ஆயுதங்களினாலே அங்கநம் செய்து பின்புஅவைகளுக்குபஞ்சாம்ருதத்தினால் திருமஞ்சநமும் முன்போல் திருவாராதநமும் செய்து அநந்தரம் ஹோமத்தை முடித்து விடவேணும். ககூ.

ఏవం తాపక్రియాం కుర్యాచ్ఛఙ్ఖ చక్రాది హేతిభిః ।
ప్రథమం తాపసంస్కార స్తాపసైర్మునిభిస్మృతః॥ ౨౦.
సర్వాశ్రమేషు వసతాం స్త్రీణాఞ్చ ద్విజసత్తమాః।

ஏவம் தாபக்ரியாம் குர்யாத் சங்க சக்ராதி ஹேதிபி: |
ப்ரதமம் தாபஸம்ஸ்காரஸ்தாபஸைர் முநிபிஸ்ஸ்ம்ருத:||உ०.
ஸர்வாஸ்ரமேஷு வஸதாம ஸ்த்ரீணாஞ்ச த்விஜஸத்தமா: |

தா-ம். இவ்விதமாய் சங்கம் சக்ரம் முதலான பஞ்சாயுதங்களினால் தாபம் என்கிற இந்த ஸம்ஸ்காரத்தைச் செய்யவும். ப்ராஹ்மணோத்தமர்களே ! இதுக்கு ஆஸ்ரம நியம மில்லை; ஸ்த்ரீ என்னும்

புருஷனென்னும் நியமமு மில்லை; எந்த ஆஸ்ரமத்திருந்தாலும் எவ ரா யிருந்தாலும் ஸகலரும் பஞ்சஸம்ஸ்காரங்களில் முதன்மையான தாப ஸம்ஸ்காரத்தைச் செய்வித்துக் கொள்ள வேணு மென்று கர்ம யோக நிஷ்டரும் ஜ்ஞாநயோக நிஷ்டருமான ருஷிகள் ப்ரதிபாதிக்கிறார்கள். ௨0௭.

కర్మ సంస్కార సిద్ధ్యర్థం జాతకర్మాది కారయేత్ ॥ ౨౧.
మన్త్ర సంస్కార సిద్ధ్యర్థం మన్త్ర దీక్షావిధిం తథా ।

கர்ம ஸம்ஸ்கார ஸித்யர்த்தம் ஜாதகர்மாதி காரயேத் || ௨௧.
மந்த்ர ஸம்ஸ்கார ஸித்யர்த்தம் மந்த்ர தீக்ஷாவிதிம் ததா |

தா-ம். ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்கார மில்லாதவன் ஒரு யாகத்தைச் செய்தால் அந்த யாகம் ஸ்வர்க்கம் முதலான பலங்களைக்கொடாது. ஆகையால் முதலில் அந்த ஸம்ஸ்காரங்களை யடைந்து, பின்பு யஜ்ஞம் செய்து ஸ்வர்க்காதி பலங்களை ஸாதிக்கவேணும். அப்படியே, மந்த்ர தீக்ஷையை ஸாங்கோபாங்கமாய்ப் பெறுதவனுக்குத் திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரம் மோக்ஷத்தைக் கொடா தாகையால் மந்த்ர தீக்ஷக்கு அங்கமான இந்த தாப ஸம்ஸ்காரத்தை அவஶ்யம் பெறவேணும். ௨௧௭.

ఉద్వాహసమయే స్త్రీణాం పుంసాఞ్చైవోపనాయనే॥ ౨౨.
చక్రాదిధారణం ప్రోక్తం మన్త్రైః పఞ్చాయుధస్యచ ॥

உத்வாஹஸமயே ஸ்த்ரீணாம் பும்ஸாஞ்சைவோப நாயநே ||
சக்ராதி தாரணம் ப்ரோக்தம் மந்த்ரை: பஞ்சாயுதஸ்யச |

தா-ம். மந்த்ர யுக்தமாக பஞ்சாயுத தாரணமாகிற இந்ததாப ஸம்ஸ்காரம் புருஷர்களுக்கு உபநயந காலத்திலும் பெண்களுக்கு உபநயந ஸ்தாநதில் செய்யப்படும் விவாஹ காலத்திலும் செய்ய வேணும். ௨௨௭.

ఇతి శ్రీపరాశర స్మృతౌ వుత్తరఖణ్డే విశిష్ట పరమ ధర్మ శాస్త్రే తాప సంస్కార వర్ణన న్నామ ప్రథమోధ్యాయః.

க-வது அத்யாயம் முற்றிற்று.

உ-வது அத்யாயம்.

புண்ட்ர ஸம்ஸ்காரத்தின் க்ரமம்.

శ్రీపరాశర ఉవాచ.

అతఃపరం ప్రవక్ష్యామి పుణ్డ్రధారణ ముత్తమమ్ ।
యస్య ధారణ మాత్రేణ సర్వతీర్థఫలం లభేత్ ॥ ౧.

ஸ்ரீபராசர உவாச.

அதஃபரம் ப்ரவக்ஷ்யாமி புண்ட்ர தாரண முத்தமம் |
யஸ்யதாரண மாத்ரேண ஸர்வ தீர்த்த பலம் லபேத் || க.

பராசரர் அருளிச்செய்கிறார்.

தா-ம். தாப ஸம்ஸ்காரம் நிரூபித்த பின்பு புண்ட்ர தாரணம் என்கிற உத்தமமான ஸம்ஸ்காரத்தைப் பரக்கச் சொல்லுகிறேன். மேல் சொல்லப் போகிற புண்ட்ரத்தைத் தரித்தவன் கங்காதி ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்த பலத்தை யடைவான். க.

పూర్వాహ్ణే పూర్వవత్స్నాత్వా సంపూజ్య మధుసూదనమ్ ।
శిష్యం స్నాత మలఙ్కృత్య పుణ్డ్రధారణ మాదిశేత్ ॥ ౨.

பூர்வாஹ்ணே பூர்வவத்ஸ்நாத்வா ஸம்பூஜ்ய மதுஸூதநம் |
சிஷ்யம் ஸ்நாத மலங்க்ருத்ய புண்ட்ரதாரணமாதிசேத் || உ.

தா-ம். தாபஸம்ஸ்காரத்திற்சொல்லியதுபோல் ப்ராதஃகாலத்தில் ஸ்நாநம்செய்து ஸ்ரியஃபதியை யாராதித்துப், பின்பு ஸ்நாநம் செய்து பரிசுத்தனாயிருக்கிற சிஷ்யனை வஸ்த்ரம் பூஷணம் முதலியவைகளினாலலங்கரித்துப் புண்ட்ர ஸம்ஸ்காரம் பெற்றுக்கொள்ளும்படி நியமிக்க வேண்டியது. உ.

స్థణ్డిలే సైకతేవాపి హ్యుపలిప్య తతోగురుః ।
ద్వాదశైతాని పుణ్డ్రాణి లిఖేత్తస్మిన్యథా క్రమమ్ ॥ ౩.

ஸ்தண்டிலே ஸைகதேவாபி ஹ்யுபலிப்ய ததோகுருஃ |
த்வாதசைதாநி புண்ட்ராணி லிகேத் தஸ்மின் யதாக்ரமம்|| ௩.

தா-ம். புல் முதலான பூண்டுக ளில்லாத ப்ரதேசத்திலாவது மணல் ப்ரதேசத்திலாவது கோமயத்தினால் லேபநம் பண்ணப்பட்ட இடத்தில் கிழக்கு முதலானதிக்குகளில் க்ரமமாக இந்தப் பன்னிரண்டு ஊர்த்வ புண்ட்ரங்களையும் எழுதவேண்டியது. ௩.

అష్టపుణ్డ్రాణ్యష్టదిక్షు మధ్యే చత్వారి విన్యసేత్ ।
వ్యాహరన్ సర్వపుణ్డ్రేషు కేశవాదీన్ యథాక్రమమ్ ॥ ౪.

ఆవాహనార్ఘ్య పాద్యైశ్చ ధూపదీప నివేదనైః।
సంపూజ్యాగ్నిం ప్రతిష్ఠాప్య హోమం పూర్వవదాచరేత్॥
పౌరుషేణతు సూక్తేన కేశవాద్యైశ్చ నామభిః।
మూలమన్త్రేణ వై హుత్వా హోమశేషం సమాపయేత్ ॥ ౬.

அஷ்டபுண்ட்ராண்யஷ்டதிக்ஷுமத்யேசத்வாரிவிந்யஸேத்|
வ்யாஹரந்ஸர்வபுண்ட்ரேஷுகேசவாதீந்யதாக்ரமம்|| ச.
ஆவாஹநார்க்யபாத்யைஶ்ச தூபதீபநிவேதநைঃ |
ஸம்பூஜ்யாக்நிம்ப்ரதிஷ்டாப்ய ஹோமம் பூர்வவதாசரேத் || ரு.
பௌருஷேணது ஸூக்தேந கேசவாத்யைச்ச நாமபிঃ |
மூலமந்த்ரேணவை ஹுத்வா ஹோமசேஷம் ஸமாபயேத்|| சு.

தா-ம். அதில் கிழக்கு முதலாக எட்டுத் திக்குக்களில் எட்டும், நடுவில் மூலைகளைவிட்டுக்கிழக்கு முதலானநாலுதிக்குக்களில்நாலும், ஆகப்பன்னிரண்டு ஊர்த்வபுண்ட்ரங்களையெழுதி, அவைகளில் எழுதின க்ரமமாக கேசவன் முதலாக மேல் சொல்லப்போகிற பன்னிரண்டு திருநாமங்களை ஆவாஹநம்பண்ணி, அவ்வவர்கள் திருநாமங்களைக்கொண்டே அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், தூபம், தீபம் இவை முதலியவைகளா லாராதித்துப் பழம் முதலாகத் தாம்பூலாந்தமாகக் கண்டருளப் பண்ணி, அநந்தரம் முன்ஸம்ஸ்கார ப்ரகரணத்திற் சொல்லியபடி அவ்வவர்கள் கல்பாநுஸாரமாய் அக்நிப்ரதிஷ்டை பண்ணி, புருஷஸூக்த ருக்குக்களினாலும் கேசவாதி த்வாதசநாமங்களினாலும் திருமந்த்ரத்தினாலும் ஹோமத்தை ஸம்பூர்ணமாகச்செய்து முடித்து விடவேண்டியது. சு.

ప్రదక్షిణం తతః కుర్యాన్నమస్కుర్యాచ్చ భక్తితః।
పుణ్డ్రాణి ధారయేచ్ఛిష్య మాసీనం వినయాన్వితమ్॥ ౭.
నమస్కృత్య తత శ్శిష్యో గురుం సర్వగుణాన్వితమ్।
తదాప్రభృతి పుణ్డ్రాణి మృదా ధార్యాణి నిత్యశః॥ ౮.

ப்ரதக்ஷிணம்ததঃகுர்யாந் நமஸ்குர்யாச்சபக்திதঃ |
புண்ட்ராணிதாரயேச்சிஷ்ய மாஸீநம்விநயாந்விதம் || எ.
நமஸ்க்ருத்யததஶ்ஶிஷ்யோ குரும்ஸர்வகுணாந்விதம் |
ததாப்ரப்ருதிபுண்ட்ராணி ம்ருதா தார்யாணிநித்யசঃ || அ.

தா-ம். அநந்தரம், பக்தியுடன் ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைப் பண்ணி, வணக்கத்துடன் தன் பக்கத்திலுட்கார்ந்திருக்கும் சிஷ்யனுக்கு மேல் சொல்லப்போகிற க்ரமமாக ஊர்த்வபுண்ட்ரதாரணம் செய்விக்கவேண்டியது. சிஷ்யனும், தனக்கு ஜ்ஞாநப்ரதனாய் ஸமஸ்தமான ஆசார்யகுண யுக்தனான குருவுக்குத் தெண்டன் ஸமர்ப்பித்து அதுமுதல் நித்யமாய் ம்ருத்திகையினால் ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரிக்கக்கடவன். அ.

ఆదాయ వైష్ణవే క్షేత్రే మృత్తికాం విమలాం శుభామ్ ।
మూలమన్త్రేణాఽభిమన్త్ర్య చోర్ధ్వపుణ్డ్రాణి ధారయేత్ ॥
లలాటాదిషు చాఙ్గేషు కేశవాదీన్ యథాక్రమమ్ ।

ஆதாயவைஷ்ணவேக்ஷேத்ரே ம்ருத்திகாம்விமலாம்சுபாம் ।
மூலமந்த்ரேணாபிமந்த்ர்ய சோர்த்வபுண்ட்ராணிதாரயேத் ॥ கூ.
லலாடாதிஷுசாங்கேஷு கேசவாதீந்யதாக்ரமம் ।

தா-ம். அந்த ம்ருத்திகையை எம்பெருமானுகந்தருளின ஸ்ரீரங்காதி திவ்யக்ஷேத்ரத்தில் நின்றும் ஸங்க்ரஹித்து, வெண்மையாய், ம்ருதுவாய், வாஸனையுடையதாம்படி செய்து திருமந்த்ரத்தினலபிமந்த்ரித்து, நெற்றிமுதலான அவயவங்களில் ஊர்த்வபுண்ட்ரமாகத்தரித்து அவைகளில் கேசவாதி மூர்த்திகளை ஆவாஹநம் செய்யவேண்டியது. கூ.

ஊர்த்வபுண்ட்ரலக்ஷணம்.

ద్వ్యఙ్గులం త్ర్యఙ్గులం వాపి హ్యన్తరాళం ప్రకల్పయేత్ ॥ ౧౦.
పార్శ్వ మఙ్గులమాత్రం స్యా దూర్ధ్వపుణ్డ్రస్య లక్షణమ్ ।

த்வ்யங்குலம்த்ர்யங்குலம்வாபி ஹ்யந்தராளம்ப்ரகல்பயேத் ॥ கഠ.
பார்ச்வமங்குலமாத்ரம்ஸ்யா தூர்த்வபுண்ட்ரஸ்யலக்ஷணம் ।

தா-ம். இரண்டங்குலமாவது, மூன்றங்குலமாவது, இடையில் விட்டு, இரண்டு பக்கங்களில் ஒவ்வோரங்குலம் அகலமுடையதாய், (ஹரிபாதாக்ருதியாய்வெண்ம்ருத்திகையினால்) தரிக்கப்பட்டது ஊர்த்வபுண்ட்ரமென்று சொல்லப்படும். கഠ.

హరేః పాదాకృతిం రమ్యం సుపార్శ్వం సుమనోహరమ్ ॥
నాసికామూల మారభ్య లలాటాన్తన్తు విన్యసేత్ ।
ఏవం సర్వాణిపుణ్డ్రాణి సచ్ఛిద్రాణ్యేవ కారయేత్ ॥ ౧౧.

ஹரேঃபாதாக்ருதிம்ரம்யம் ஸுபார்ஶ்வம்ஸுமநோஹரம்|| கக.
நாஸிகாமூலமாரப்ய லலாடாந்தஞ்சவிந்யஸேத்|
ஏவம்ஸர்வாணிபுண்ட்ராணி ஸச்சித்ராண்யேவதாரயேத்|| கஉ.

தா-ம். ஹரிபாதாக்ருதியாய், பஹுகுண ஸம்ருத்தமாய், மநஸ்ஸுக்கு ஆஹ்லாத ஜநகமான ஊர்த்வபுண்ட்ரத்தை நாஸிகாமூலமென்று சாஸ்த்ரங்களில் ஸித்தமான நாஸிகையின் மூன்றுவது பாகம் தொடங்கி நெற்றிக்கட்டுவரையில் அழகாகத் தரிக்கவேணும். இப்படியே ஹரிபாதாக்ருதியான மற்ற ஊர்த்வபுண்ட்ரங்களையும் இடையில் இடம்விட்டே தரிக்கவேணும். கஉ.

இடைவெளியில்லாத ஊர்த்வபுண்ட்ரத்துக்கு நிஷேதம்.

ప్రమాణహీనం బద్ధాగ్ర మచ్ఛిద్రఞ్చ వివర్జయేత్ ।
అచ్ఛిద్ర మూర్ధ్వపుణ్డ్రన్తు యః కరోతి విమూఢధీః ॥ ౧౩.
తేనైవ హి ధృత స్సమ్యక్ఛునః పాదో న సంశయః ।
తస్మాచ్ఛిద్రాన్వితం పుణ్డ్రం బ్రాహ్మణ స్సతతం ధరేత్ ॥ ౧౪.

ப்ரமாணஹீநம்பத்தாக்ர மச்சித்ரஞ்சவிவர்ஜயேத்|
அச்சித்ரமூர்த்வபுண்ட்ரந்து யঃகரோதிவிமூடதீঃ|| கங.
தேநைவஹித்ருதஸ்ஸம்யக் சுநঃபாதோநஸம்சயঃ|
தஸ்மாச்சித்ராந்விதம்புண்ட்ரம் ப்ராஹ்மணஸ்ஸததம்தரேத்||

தா-ம். கீழுதஹரித்த நீளம்அகலங்களில் குறைந்தாலும் அதிக்ரித்தாலும், நுனிசேர்ந்திருந்தாலும், இடையில்வெளியில்லாவிட்டாலும், அப்படிப்பட்ட புண்ட்ரத்தைத்தரிக்கக்கூடாது. ஊர்த்வபுண்ட்ரத்தின்ஸ்வரூபமறியாத ஒருமூடன் அந்தபுண்ட்ரத்தைத்தரித்தானேயானால், அவன் நாயின்காலைத் தரித்தவனுவான்; இதில்ஸம்சயமில்லை. ஆகையால் இடைவெளியுள்ள ஊர்த்வபுண்ட்ரத்தையே ப்ராஹ்மணன் தரிக்கக்கடவன். கச.

வைதிககர்மங்களில் ஊர்த்வபுண்ட்ரதாரணவிதி.

సన్ధ్యాకాలే జపే హోమే స్వాధ్యాయే పితృతర్పణే ।
శ్రాద్ధే దానే చ యజ్ఞే చ ధారయే దూర్ధ్వపుణ్డ్రకమ్ ॥ ౧౫.

ஸந்த்யாகாலேஜபேஹோமே ஸ்வாத்யாயேபித்ருதர்பணே|
ஶ்ராத்தேதாநேசயஜ்ஞேச தாரயேதூர்த்வபுண்ட்ரகம்|| கரு.

தா-ம். தினந்தோறும் த்ரிகாலத்திலும் அநுஷ்டிக்கவேண்டும் ஸந்த்யாவந்தநம், ஜபம், ஹோமம், வேதாத்யயநம், பர்வகாலங்களில்

செய்யவேண்டும் பித்ருதர்பணம், ஶ்ராத்தம், தாநம், ஒரு பலத்தை உத்தேசித்துச் செய்யும் யாகம், இவை முதலான நித்யநைமித்திக காம்ய கர்மங்களை ஊர்த்வபுண்ட்ரம் தரித்தே அநுஷ்டிக்கவேணும்.

ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் செய்த கர்மம் பலமின்றியேயொழிகை.

ఊర్ధ్వపుణ్డ్రన్తు విప్రాణాం సన్ధ్యానుష్ఠానకర్మవత్ ।
శ్రాద్ధకాలే విశేషేణ కర్తా భోక్తా చ నత్యజేత్ ॥ ౧౬.
ఊర్ధ్వపుణ్డ్రవిహీనస్తు కర్మ యత్కిఞ్చిదాచరేత్ ।
తత్సర్వం విఫలం యాయా దిష్టాపూర్తమపిద్విజాః ॥ ౧౭.

ஊர்த்வபுண்ட்ரந்து விப்ராணும் ஸந்த்யாநுஷ்டாந கர்மவத் |
ஶ்ராத்தகாலேவிசேஷேண கர்த்தாபோக்தாசநத்யஜேத் || கசு.
ஊர்த்வபுண்டரவிஹீநஸ்து கர்மயத்கிஞ்சிதாசரேத் |
தத்ஸர்வம்விபலம்யாயா திஷ்டாபூர்த்தமபித்விஜாஃ|| கஎ.

தா-ம். ப்ராஹ்மணனுக்கு ஸந்த்யாவந்தநம்போல் ஊர்த்வபுண்ட்ர தாரணம் ஆவஶ்யகம். அதிலும் ஶ்ராத்தகாலத்தில் ஶ்ராத்தத்தைப் பண்ணுகிறவனும் அதில் புஜிக்கிறவனும் ஊர்த்வபுண்ட்ரத்தை விடாமல் தரிக்கக்கடவன். ஊர்த்வபுண்ட்ர மில்லாதவன் செய்த நித்ய நைமித்திக கர்மங்களும், யாகமும், குளம் கிணறு முதலானவைகளும் பலமின்றியே போய்விடும். கஎ.

ஊர்த்வபுண்ட்ர ஶூந்யசரீரதர்சந நிஷேதம்.

యచ్ఛరీరం మనుష్యాణా మూర్ధ్వపుణ్డ్రవివర్జితమ్ ।
ద్రష్టవ్యం నైవ తద్గాత్రం శ్మశాన సదృశం హి తత్ ॥ ౧౮.

யச்சரீரம்மநுஷ்யாணு மூர்த்வபுண்ட்ரவிவர்ஜிதம்|
த்ரஷ்டவ்யம்நைவதத்காத்ரம் ஶ்மசாநஸத்ருசம்ஹிதத் || கஅ.

தா-ம். ஊர்த்வபுண்ட்ரமில்லாத சரீரம் ஶ்மசாநதுல்யமானதாகையால் அதைப் பார்க்கவேகூடாது. கஅ.

ஊர்த்வபுண்ட்ர தாரணபலம்.

మృదమాదాయ కృష్ణాయా స్తులస్యా మూలసంభవామ్ ।
ధారయే దూర్ధ్వపుణ్డ్రాణి తస్యాః ఫల మనన్తకమ్ ॥ ౧౯.
యత్ర దివ్యం హరేః క్షేత్రం మృదమాదాయ తత్ర వై ।
ధారయే దూర్ధ్వపుణ్డ్రాణి త్రిసన్ధ్యాసు ద్విజోత్తమాః ॥ ౨౦.

ம்ருதமாதாயக்ருஷ்ணாயா ஸ்துலஸ்யாமூலஸம்பவாம்।
தாரயேதூர்த்வபுண்ட்ராணி தஸ்யாஃபலமநந்தகம்॥ ௧௯.
யத்துதிவ்யம்ஹரேஃக்ஷேத்ரம் ம்ருதமாதாயதத்ரவை।
தாரயேதூர்த்வபுண்ட்ராணி த்ரிஸந்த்யாஸு-த்விஜோத்தமாஃ॥

தா-ம். ப்ராஹ்மணோத்தமர்களே! க்ருஷ்ண துளஸியின் மூலத்திலிருக்கும் ம்ருத்துவினாலாவது, ஸ்ரீரங்காதிபகவத்க்ஷேத்ரத்தின் ம்ருத்துவினாலாவது, உதயம், மத்யாஹ்நம், ஸாயங்காலம், ஆகிற மூன்றுஸந்த்யாகாலங்களிலும் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்தால் அநந்தமான பலத்தை யடையக்கடவன். ௨௦.

வேறுவிதமான புண்ட்ரங்களைத்தரித்தால் சூத்ரனாதல்.

అచ్ఛిద్ర మూర్ధ్వపుణ్డ్రంవా త్రిపుణ్డ్రం యస్తు ధారయేత్ ।
స జీవన్నేవ శూద్రత్వ మాశు గచ్ఛ త్యసంశయమ్ ॥ ౨౧.

அச்சித்ரமூர்த்வபுண்ட்ரம்வா த்ரிபுண்ட்ரம்யஸ்துதாரயேத்।
ஸஜீவந்நேவசூத்ரத்வ மாசுகச்சத்யஸம்சயம்॥ ௨௧.

தா-ம். இடைவெளியில்லாத ஊர்த்வபுண்ட்ரத்தையாவது, திர்யக் புண்ட்ரத்தையாவது எவனொருவன் தரிக்கிறானோ? அவன் இந்த ஜந்மத்திலேயே வைதிக கர்மங்களுக்கு யோக்யதை யில்லாத சூத்ரனாயே சீக்கிரத்திலாய் விடுவன். இது நிச்சயம். ௨௧.

த்ரிபுண்ட்ரதாரியோடு ஸஹவாஸநிஷேதம்.

కపాల దేహభస్మాఽస్థి శుక్తి పాషాణ ధారిణమ్ ।
త్రిపుణ్డ్ర ధారిణం విప్రంచణ్డాలమివ సన్త్యజేత్ ॥ ౨౨.

கபாலதேஹபஸ்மாஸ்தி சுக்திபாஷாணதாரிணம்।
த்ரிபுண்ட்ரதாரிணம்விப்ரம் சண்டாளமிவஸந்த்யஜேத்॥ ௨௨.

தா-ம். மண்டையோடு, உடலின் சாம்பல், எலும்பு, சங்கு, லிங்கமென்று கட்டிக்கொள்ளும் கல்லு, இவைகளையாவது, த்ரிபுண்ட்ரத்தையாவது எவன் தரிக்கிறானோ? அவனை ஸஹவாஸ ஸம்பாஷணங்களுக்கு யோக்யதையில்லாத சண்டாளனைப்போல் தூரத்தில் விலக்கவேண்டியது. ௨௨.

த்ரிபுண்ட்ரதாரிக்கு ராஜ்யத்தில் நிஷேதம்.

అగ్నిదం గరద ఞ్చైవ లిఙ్గపాషాణధారిణమ్ !
తిర్యక్పుణ్డ్రధరం విప్రం రాజా రాష్ట్రా త్ప్రవాసయేత్ । ౨౩.

அக்நிதம்கரதஞ்சைவ லிங்கபாஷாணதாரிணம்|
திர்யக்புண்ட்ரதரம்விப்ரம் ராஜாராஷ்ட்ராத்ப்ரவாஸயேத்|| உ௩.

தா-ம். வீட்டில் நெருப்பு வைக்கிறவன், அந்நாதிகளில் விஷத்தை யிடுகிறவன், லிங்கதாரி, த்ரிபுண்ட்ரதாரி, ஆன இப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களை ராஜா தன் ராஜ்யத்துக்கு வெளியில் துறத்திவிடக்கடவன். உ௩.

த்ரிபுண்ட்ரதாரிக்கு கோஷ்டியில் நிஷேதம்.

తిర్యక్పుణ్డ్రధరో విప్రః పఙ్క్తిమధ్యే స్థితో యది ।
సా పఙ్క్తి ర్బ్రహ్మహత్యాయాం యుజ్యతే నాత్రసంశయః॥
తిర్యక్పుణ్డ్రధరో విప్రో యత్ర తిష్ఠతి దుర్మతిః ।
సదేశః పాపసంభూతి శ్శ్మశాన సదృశో భవేత్॥ ౨౪

திர்யக்புண்ட்ரதரோவிப்ரः பங்க்திமத்யேஸ்திதோயதி|
ஸாபங்க்திர்ப்ரஹ்மஹத்யாயாம் யுஜ்யதேநாத்ரஸம்சய:|| உ௪.
திர்யக்புண்ட்ரதரோவிப்ரோ யத்ரதிஷ்டதிதுர்மதி:|
ஸதேச:பாபஸம்பூதி ச்ச்மசாநஸத்ருசோபவேத்|| உ௫.

தா-ம். த்ரிபுண்ட்ரதாரியான ப்ராஹ்மணனோடுகூட ஒருவரிசையில்நின்றவர்கள் ப்ரஹ்மஹத்யா பாபத்தையடைவார்கள். ஸ்வதர்மத்தைவிட்டு, துர்புத்தியுடையனாய் த்ரிபுண்ட்ரத்தைத்தரித்தவன் வஸிக்கும் தேசம் பாபிஷ்டமாய் ஶ்மசாநம்போல் அசுசியாயிருக்கும். உ௫.

த்ரிபுண்ட்ரதாரிக்கு தண்டம்.

బ్రాహ్మణః కులజో విద్వాన్ తిర్యక్పుణ్డ్రధరో యది ।
తం గర్దభం సమారోప్య రాజా రాష్ట్రాత్ప్రవాసయేత్॥

ப்ராஹ்மண:குலஜோவித்வாந் திர்யக்புண்ட்ரதரோயதி|
தம்கர்த்தபம்ஸமாரோப்ய ராஜாராஷ்ட்ராத்ப்ரவாஸயேத்|| உ௬.

தா-ம். ப்ராஹ்மணஜாதியில் அதிலும் ஸதாசாரமுள்ளகுலத்தில் பிறந்து வேதசாஸ்த்ரங்களை யதிகரித்தவன் திர்யக்புண்ட்ரத்தைத்தரித்தால், ராஜா அவனை கழுதைமேலேற்றித் தேசத்துக்கு வெளியில் விட்டுவிட வேண்டியது. உ௬.

తస్మాత్తు బ్రాహ్మణో నిత్య మూర్ధ్వపుణ్డ్రం హి ధారయేత్ ।
ఊర్ధ్వపుణ్డ్రేణ సంసిద్ధిం లభతే నాత్ర సంశయః ॥ ౨౭

தஸ்மாத்துப்ராஹ்மணோநித்ய மூர்த்வபுண்ட்ரம்ஹிதாரயேத்|
ஊர்த்வபுண்ட்ரேண ஸம்ஸித்திம் லபதேநாத்ரஸம்சய:|| உஎ.

தா-ம். ஆகையால் ப்ராஹ்மணன் எப்போதும் ஊர்த்வபுண்ட்ரத்தையே தரிக்கக்கடவன். அதினால் ஸமஸ்தமான கர்மம், மந்த்ரம், தந்த்ரம் இவைமுதலானவைகள் ஸித்தித்துப் பலத்தைக்கொடுக்கும். இதிலொரு ஸம்சயமும் கிடையாது. உஎ.

ஊர்த்வபுண்ட்ரங்களின் ஸ்தாநமும், ஸ்தாநங்களுக்குத்தக்க ப்ரமாணமும், தேவதையும்.

ఊర్ధ్వపుణ్డ్ర ప్రమాణాని స్థానాని మునిసత్తమాః।
వ్యూహభేదేన నామాని వక్ష్యామి చ పృథక్ పృథక్॥ ౨౮.

ஊர்த்வபுண்ட்ரப்ரமாணாநி ஸ்தாநாநிமுநிஸத்தமா:|
வ்யூஹபேதேநநாமாநி வக்ஷ்யாமிசப்ருதக்ப்ருதக்|| உஅ.

தா-ம். இப்படி ஸலக்ஷணமான ஊர்த்வபுண்ட்ரத்தின் மாஹாத்ம்யத்தையும் இதரபுண்ட்ரங்களின் நிக்ருஷ்டதையையும் சொன்னேன். இனி அதின் ப்ரமாணத்தையும் இடங்களையும் அவைகளில் ஆவாஹநம் செய்யவேண்டும் திருநாமங்களையும் சொல்லப்போகிறேன். ருஷிகளே! கேளுங்கள். உஅ.

చతుస్త్రిద్వ్యఙ్గులం వాపి విస్తారం పరికల్పయేత్॥

சதுஸ்த்ரித்வ்யங்குலம்வாபி விஸ்தாரம்பரிகல்பயேத்||

தா-ம். நாலு அங்குலமாவது, மூன்று அங்குலமாவது, இரண்டு அங்குலமாவது, அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி அகலமுள்ளதாக ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது. உஅ௯.

లలాటే కేశవాయేతి చతురఙ్గుళమాయతమ్॥ ౩౦.

చతుశ్చక్రధరం దేవం శుద్ధజామ్బూనదప్రభమ్।

லலாடேகேசவாயேதி சதுரங்குலமாயதம்|| உக.
சதுஸ்சக்ரதரந்தேவம் சுத்தஜாம்பூநதப்ரபம்|

தா-ம். முகத்தில் நாலு அங்குலம் உயரமுள்ள ஊர்த்வபுண்ட்ரத்தைத்தரித்து, அதில் நாலு சக்ரங்களையுடையவனும் அழுக்கெடுத்த தங்கம்போல் காந்தியையுடையவனுன கேசவனை கேசவாயநம: என்கிற மந்த்ரத்தினுல் ஆவாஹநம் பண்ணவேண்டியது. அந்த ஊர்த்வபுண்ட்ரத்துக்கும் கேசவன் என்றே திருநாமம்; மற்ற ஊர்த்வபுண்ட்ரங்களிலும் இப்படியே ஊஹித்துக்கொள்ள வேண்டியது. உகஉ.

నాభౌ నారాయణాయేతి ధారయేత్తు దశాఙ్గులమ్ ॥ ౩౦.
చతుశ్శఙ్ఖధర న్దేవం నీలజీమూతసన్నిభమ్ ।

நாபௌ நாராயணாயேதி தாரயேத்துதசாங்குலம்|| ௩௦.
சதுச்சங்கதரந்தேவம் நீலஜீமூதஸந்நிபம்|

தா-ம். கொப்பூழின் மேலே நடு உதரத்தில், நாலு சங்கங்களையும் நீலமேகம்போன்ற காந்தியையுமுடைய நாராயணனை நாராயணாயநம: என்னும் மந்த்ரத்தினால் பத்து அங்குல ப்ரமாணம் தரிக்கவேணும். ௩௦உ.

హృదయే మాధవాయేతి న్యసే దష్టాఙ్గుల న్తథా ॥ ౩౧.
చతుర్గదాధర న్దేవ మిన్దీవరదళప్రభమ్ ।

ஹ்ருதயேமாதவாயேதி ந்யஸேதஷ்டாங்குலந்ததா|| ௩௧.
சதுர்க்கதாதரந்தேவ மிந்தீவரதளப்ரபம்|

தா-ம். மார்பில், கருநெய்தல்போன்ற காந்தியையும் நாலு கதைகளையுமுடைய மாதவனை மாதவாயநம: என்னும் மந்த்ரத்தைச் சொல்லி எட்டங்குல ப்ரமாணம் தரிக்கவும். ௩௧உ.

గోవిన్దాయేతి కణ్ఠేచ ధారయే చ్చతురఙ్గులమ్ ॥ ౩౨.
చతుర్ధనుర్ధర న్దేవం కోటిచన్ద్రసమప్రభమ్ ।

கோவிந்தாயேதிகண்டேச தாரயேச்சதுரங்குலம்| ௩௨.
சதுர்த்தநுர்த்தரந்தேவம் கோடிசந்த்ரஸமப்ரபம்||

தா-ம். கோடி சந்த்ரனுக்கு ஸமானமான ஒளியையும் நாலு தநுஸ்ஸுக்களையுமுடைய கோவிந்தனை கோவிந்தாயநம: என்னும் மந்த்ரத்தைச்சொல்லி நாலங்குல ப்ரமாணம் கழுத்தில் தரிக்கவும்.

విష్ణుఞ్చ దక్షిణే కుక్షౌ ధారయేత్తు దశాఙ్గులమ్ ॥ ౩౩.
చతుర్హలధర న్దేవం పద్మకిఞ్జల్కసన్నిభమ్ ।

விஷ்ணுஞ்சதக்ஷிணே குக்ஷௌ தாரயேத்துதசாங்குலம்|| ௩௩.
சதுர்ஹலதரந்தேவம் பத்மகிஞ்சல்கஸந்நிபம்|

தா-ம். தாமரைப்பூவின் தாதுபோன்ற வர்ணத்தையும் நாலு கலப்பைகளையுமுடைய ஸ்ரீவிஷ்ணுவை விஷ்ணவேநம: என்னும் மந்த்ரத்தைச் சொல்லி பத்தங்குல ப்ரமாணம் வயிற்றின் வலதுபக்கத்தில் தரிக்கவும். ௩௩உ.

మధుసూదనం బాహుమధ్యే న్యసే దష్టాఙ్గుల న్తథా ॥ 34.
చతుర్ముసలభృద్దేవ మరవిన్దాభ మేవ చ।

மதுஸூதநம்பாஹுமத்யே ந்யஸேதஷ்டாங்குலந்ததா|| ௩௪.
சதுர்முஸலப்ருத்தேவ மரவிந்தாபமேவச|

தா-ம். தாமரைப் பூப்போன்ற காந்தியையும் நாலு உலக்கைகளையுமுடைய மதுஸூதநனை மதுஸூதநாயநம: என்னும் மந்த்ரத்தை யநுஸந்தித்து எட்டங்குல ப்ரமாணம் வலது புஜத்தில் தரிக்கவும். ௩௪ உ.

త్రివిక్రమాయేతి చాంసే ధారయే చ్చతురఙ్గులమ్ ॥ 35.
చతుఃఖడ్గధర న్దేవం జ్వలదగ్ని సమప్రభమ్।

த்ரிவிக்ரமாயேதிசாம்ஸே தாரயேச்சதுரங்குலம்|| ௩௫.
சதுஃகட்கதரந்தேவம் ஜ்வலதக்நிஸமப்ரபம்|

தா-ம். ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்நியோடொத்த தேஜஸ்ஸையும் நாலு கத்திகளையுமுடைய த்ரிவிக்ரமனை த்ரிவிக்ரமாயநம: என்னும் மந்த்ரத்தை யநுஸந்தித்து நாலங்குல ப்ரமாணம் வலது தோளில் தரிக்கவும். ௩௫ உ.

వామనం వామకుక్షౌతు ధారయేత్తు దశాఙ్గులమ్ ॥ 36.
చతుర్వజ్రధర న్దేవం తరుణాదిత్యసన్నిభమ్।

வாமநம்வாமகுக்ஷௌது தாரயேத்துதசாங்குலம்|| ௩௬.
சதுர்வஜ்ரதரந்தேவம் தருணாதித்யஸந்நிபம்|

தா-ம். மத்யாஹ்நத்து ஸூர்யன்போன்ற ஒளியையும் நாலு வஜ்ராயுதங்களையுமுடைய வாமநனை வாமநாயநம: என்னும் மந்த்ரத்தை யநுஸந்தித்துப் பத்தங்குல ப்ரமாணம் வயிற்றி னிடதுபாகத்தில் தரிக்கவும். ௩௬ உ.

శ్రీధరం బాహుమధ్యేతు న్యసే దష్టాఙ్గుల న్తథా ॥ 37.
పట్టసాయుధభృద్దేవం పుణ్డరీకాభ మేవచ।

ஶ்ரீதரம்பாஹுமத்யேது ந்யஸேதஷ்டாங்குலந்ததா|| ௩௭.
பட்டஸாயுதப்ருத்தேவம் புண்டரீகாபமேவச|

தா-ம். புண்டரீகஸமாநவர்ணத்தையும் நாலு பட்டஸாயுதங்களையுமுடைய ஸ்ரீதரனை ஸ்ரீதராயநம: என்னும் மந்த்ரத்தைச் சொல்லி எட்டங்குல ப்ரமாணம் இடது புஜத்தில் தரிக்கவும். ௩௭ உ.

హృషీకేశస్తువామాంసే ధారయే చ్చతురఙ్గులమ్ ॥ ౩౮,
చతుర్ముద్గరభృద్దేవం విద్యుద్గణసమప్రభమ్ ।
ஹ்ருஷீகேசஸ்துவாமாம்ஸே தாரயேச்சதுரங்குலம்|| ௩அ.
சதுர்முத்கரப்ருத்தேவம்வித்யுத்கணஸமப்ரபம்|

தா-ம். மின்னலுக்கு ஸமானமான தேஜஸ்ஸையும் நாலு உழல் தடிகளையுமுடைய ஹ்ருஷீகேசனை ஹ்ருஷீகேசாயநம: என்னும் மந்த்ரத்தை யநுஸந்தித்து நாலங்குல ப்ரமாணம் இடதுதோளில் தரிக்கவும். ௩அ௨.

పృష్ఠే తు పద్మనాభేతి ధారయే చ్చతురఙ్గులమ్ ॥ ౩౯.
సర్వాయుధధర ద్దేవం కోటిసూర్యసమప్రభమ్ ।
ப்ருஷ்டேதுபத்மநாபேதி தாரயேச்சதுரங்குலம்|| ௩௯.
ஸர்வாயுததரந்தேவம் கோடிஸூர்யஸமப்ரபம்|

தா-ம். கோடிஸூர்யர்களுக்கு ஸமானமான காந்தியையும் ஸமஸ்தமான ஆயுதங்களையுமுடைய பத்மநாபனை பத்மநாபாயநம: என்னும் மந்த்ரத்தை யுச்சரித்து நாலங்குல ப்ரமாணம் முதுகில் தரிக்கவும். ௩௯௨.

కకుదే దామోదరేతి ధారయే చ్చతురఙ్గులమ్ ॥ ౪౦.
చతుష్పాశధర స్తేవ మిన్ద్రగోపసమప్రభమ్ ।
ககுதேதாமோதரேதி தாரயேச்சதுரங்குலம்|| ௪௦.
சதுஷ்பாசதரந்தேவ மிந்த்ரகோபஸமப்ரபம்|

தா-ம். பட்டுப்பூச்சிக்கு ஸமானமான நிறத்தையும் நாலு பாசாயுதங்களையுமுடைய தாமோதரனை தாமோதராயநம: என்னும் மந்த்ரத்தை யநுஸந்தித்து நாலங்குல ப்ரமாணம் கழுத்துப் பிடரில் தரிக்கவும். ௪௦௨.

నమోస్తువాసుదేవాయ మూర్ధ్ని చైవం త్రయోదశమ్ ॥ ౪౧.
நமோஸ்துவாஸுதேவாய மூர்த்நிசைவந்த்ரயோதசம்|| ௪௧.

தா-ம். இப்படி தரித்து மிகுந்த திருமண்காப்பை வாஸுதேவாயநம: என்னும் மந்த்ரத்தினால் சிரஸ்ஸில் தரிக்கவும்|| ௪௧.

ஊர்த்வபுண்ட்ரம் தரித்த சரீரத்தின் பெருமை.

ధారణా దూర్ధ్వపుణ్డ్రస్య శరీరం మన్దిరం హరేః ।
తస్మాత్తు సతతం ధార్య మూర్ధ్వపుణ్డ్రం ద్విజోత్తమైః ॥ ౪౨.

தாரணாதூர்த்வபுண்ட்ரஸ்ய சரீரம்மந்திரம்ஹரே:|
தஸ்மாத்துஸததம்தார்ய மூர்த்வபுண்ட்ரம்த்விஜோத்தமை:||

தா-ம். பன்னிரண்டு திருநாமங்களையுடைய இந்த ஊர்த்வ புண்ட்ரங்கள் எந்தச் சரீரத்தில் தரிக்கப்படுகிறதோ; அந்தச் சரீரம் ஸர்வேஸ்வரனுக்குக் கோயிலாயிருக்கும். ஆகையால் ப்ராஹ்மணர் முதலானவர்கள் ஸர்வகாலமும் ஊர்த்வபுண்ட்ரங்களை யணியக்கடவர்கள். ௪௨.

அதில்லையாகில் அவத்யம்.

ఊర్ధ్వపుణ్డ్రం వినా యస్తు సన్ధ్యాకర్మాదికఞ్చరేత్ ।
తత్సర్వం రాక్షసైర్నీతం జపహోమాదికన్తథా॥ ౪౩.

ஊர்த்வபுண்ட்ரம்விநாயஸ்து ஸந்த்யாகர்மாதிகஞ்சரேத்|
தத்ஸர்வம்ராக்ஷஸைர்நீதம் ஜபஹோமாதிகந்ததா|| ௪௩.

தா-ம். ஊர்த்வபுண்ட்ரதாரணம் செய்துகொள்ளாமல் ஸந்த்யாவந்தநம், மந்த்ரஜபம், நித்யநைமித்திகமான ஹோமம் இது முதலான எந்தக் கர்மங்களை யநுஷ்டித்தாலும் அவைகளை ராக்ஷஸர்கள் கொண்டுபோவர்கள். என்றால், அவைகளால் தேவர்கள் த்ருப்தியடையார்கள்; இவனுக்குப் பலத்தையுங் கொடார்கள்; அவைகள் நிஷ்பலங்களாய் விடும் என்பதாம். ௪௩.

తే శవాః పురుషా లోకే యేషాం హృది న కేశవః ।
కేశవార్పితచిత్తా యే న శవా న పునర్భవాః ॥ ౪౪.

தேசவா:புருஷாலோகே யேஷாம்ஹ்ருதிநகேசவ:|
கேசவார்ப்பிதசித்தாயே நசவாநபுநர்ப்பவா:|| ௪௪.

தா-ம். உலகத்தில் பிணங்களென்று சொல்லப்பட்டவர்கள் யாரெனில்; எவர்களுடைய ஹ்ருதயத்தில் ஸ்ரிய:பதி வஸிக்கவில்லையோ? அவர்களே பிணம்போல்பவர்கள்; அவர்கள் ஒரு கார்யத்துக்கும் உபயோகமின்றி அபரிசுத்தராயிருப்பர்கள். எவர்கள் ஹ்ருதயத்தில் ஸர்வகாலமும் பகவான் வஸிக்கிறனோ? அவர்களுடைய ஜந்மம் ஸபலமாகையால் அவர்கள் பிணமாகச் சொல்லப்பட மாட்டார்கள்; இவ்வுலகத்தில் மறுஜந்மத்தையு மடையார்கள். ௪௪.

நாமஸம்ஸ்காரத்தின் க்ரமம்.

నామకర్మ ప్రవక్ష్యామి పాపనాశన ముత్తమమ్ ।
జాతకర్మణివా క్షౌరే తథా మౌఞ్జీనిబన్ధనే ॥ ౪౫.
మన్త్రాధ్యయనకాలేవా నామ కుర్యాద్విధానతః ।

நாமகர்மப்ரவக்ஷ்யாமி பாபநாசநமுத்தமம்|
ஜாதகர்மணிவாக்ஷௌரே ததாமௌஞ்சீநிபந்தநே|| சரு.
மந்த்ராத்யயநகாலேவா நாமகுர்யாத்விதாநத:|

தா-ம். பஞ்சஸம்ஸ்காரத்தில் நாமக்ரியை யென்பது நான்காவது ஸம்ஸ்காரம். அதைச் சொல்லப்போகிறேன். அது ஸமஸ்தமான பாபங்களையும் போக்கும். எல்லாவற்றிலும் சிறந்தது. இதை ஜாதகர்மம் செய்யும்போதாவது, சௌளகாலத்திலாவது, உபநயநகாலத்திலாவது, இந்தக்காலங்கள் தப்பினால் மந்த்ரோபதேசகாலத்திலாவது மேல் சொல்லப்போகிற விதிப்படி செய்யவேண்டும். சரு உ.

వాసుదేవాదయో యేచ మూర్తయః కేశవాదయః॥ ౪౬.
మత్స్యకూర్మాదయో వ్యూహా విభవా శ్చతథాపరే।
తేషామాన్యతమ న్నామ దద్యా ద్వాన్యం శుభాహ్వయమ్॥

வாஸுதேவாதயோயேச மூர்த்தய:கேசவாதய:|| சசு.
மத்ஸ்யகூர்மாதயோவ்யூஹா விபவாச்சததாபரே|
தேஷாமாந்யதமந்நாம தத்யாத்வாந்யம்சுபாஹ்வயம்|| சஎ.

தா-ம். நாமகரண மென்பது-பெயரிடுதல். அதில் வாஸுதேவன் ஸங்கர்ஷணன் முதலான வ்யூஹாவதாரங்களென்ன, கேசவன் நாராயணன் முதலான வ்யூஹாந்தரங்களென்ன, மத்ஸ்யம், கூர்மம், வராஹம் முதலான விபவாவதாரங்களென்ன, ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீநிவாஸன் முதலான அர்ச்சாவதாரங்களென்ன, இவைகளில் தனக்கபிமதமானதொரு திவ்யமங்கள விக்ரஹத்துக்கு வாசகமான திருநாமத்தையாவது, பூர்வாசார்யர்களுக்கு வாசகமான சடகோபன் இராமாநுஜன் முதலான இவைகளிலொரு திருநாமத்தை யாவது, இடவேண்டும். சஎ.

అభ్యర్చ్య విధివద్విష్ణుం నామమూర్తి మనుస్మరన్।
ఆవాహనార్ఘ్యపాద్యైశ్చ ధూపదీపాదిభి స్తథా॥ ౪౮.
గన్ధపుష్పాదినాభ్యర్చ్య జుహుయాచ్చ విధానతః।

அப்யர்ச்யவிதிவத்விஷ்ணும் நாமமூர்த்திமநுஸ்மரன்|
ஆவாஹநார்க்யபாத்யைச்ச தூபதீபாதிபிஸ்ததா|| சஅ.
கந்தபுஷ்பாதிநாப்யர்ச்ய ஜுஹுயாச்சவிதாநத:|

தா-ம். ஆசார்யன், முன்னம் ஸர்வேஶ்வரனுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்து அநந்தரம் சிஷ்யனுக் கிடப்போகிற திருநாமத்துக்கு வாச்யமான திவ்யமங்கள விக்ரஹத்தை த்யாநித்து அந்த விக்ரஹயுக்தனான ஶ்ரியஃபதியைக் கலசத்திலாவது, கூர்ச்சத்திலாவது, ஆவாஹநம்பண்ணி அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் இவைகளை ஸமர்ப்பித்து தூபம் தீபம் சத்ரம் சாமரம் தர்சிப்பித்து திருமாலை சந்தநம் திருவாபரணம் முதலானவைகளாலலங்கரித்து இப்படி ஷோடசோபசாரங்களினு லாராதித்து அநந்தரம் நாமகரணத்திற் சொல்லிய விதிப்படி அக்நியில் ஹோமம் பண்ணவேணும். ௪௮.

చక్రాదిధారణం యత్ర యత్రవా నామకర్మచ॥ ౪౯.
తన్మాసాధిపతేర్నామ మాసపేషు ప్రశస్యతే।
మూర్తయః కేశవాద్యాశ్చ మార్గశీర్షాదిమాసపాః॥ ౫౦.

சக்ராதிதாரணம் யத்ர யத்ரவாநாமகர்மச|| ௪௯.
தந்மாஸாதிபதேர் நாம மாஸபேஷு ப்ரசஸ்யதே|
மூர்த்தயஃகேசவாத்யாஶ்ச மார்க்கசீர்ஷாதிமாஸபாஃ|| ௫௦.

தா-ம். கேசவன் முதலாய் தாமோதரன் பர்யந்தமான பன்னிரண்டு திருநாமங்களும் மார்க்கசீர்ஷம் என்கிற மார்கழிமாஸம் முதல் கார்த்திகைமாஸம் வரைக்குமான பன்னிரண்டு மாஸங்களுக்கும் க்ரமமாக தேவதைகள். ஆகையால் அந்தத் திருநாமங்களை யிடும்போது எந்தமாஸத்தில் ஸமாஶ்ரயணம் செய்யப்பட்டதோ? எந்த மாஸத்தில் நாமகர்மம் செய்யப்படுகிறதோ ? அந்த மாஸத்துக்கதிபதியான மூர்த்தியின் திருநாமத்தை யிடுவது மிகவும் ஶ்லாக்யமாயிருக்கும்.

యా తన్మాసపతే ర్మూర్తి స్తత్ర తాం దేశిక స్స్వయమ్ ।
పరిక్రమ్య నమస్కృత్య హ్యావాహ్య పురతో హరేః॥ ౫౧.
తన్మూర్తిం మనసా ధ్యాత్వా నామ తస్యాః ప్రచోదయేత్ ।

யாதந்மாஸபதேர்மூர்த்தி ஸ்தத்ர தாம்தேசிகஸ்ஸ்வயம்|
பரிக்ரம்யநமஸ்க்ருத்ய ஹ்யாவாஹ்யபுரதோஹரேஃ|| ௫௧.
தந்மூர்த்திம்மநஸாத்யாத்வாநாமதஸ்யாஃப்ரசோதயேத்|

தா-ம். கேசவன் முதலான திருநாமங்களை யிடும்போதும் அந்தமாஸத்துக்கு அதிபதியினுடைய திவ்யமங்களவிக்ரஹத்தைபகவத் ஸந்நிதிக்கெதிரில் ஆவாஹநம்பண்ணி முன்சொன்ன ஸமஸ்தஉப

சாரங்களையும் செய்து ப்ரதக்ஷிண நமஸ்காரங்களையும் செய்து அந்த விக்ரஹத்தை மநஸ்ஸில் த்யாநித்து ஆசார்யன் அந்த நாமத்தை சிஷ்யனுக்கு இடவேண்டியது. ௫௧.

నామవైష్ణవతాహేతు ర్ముఖ్య ఇత్యుచ్యతే బుధైః ॥ ౫౨.
యోజయేన్నామదాసాన్తం భగవన్నామపూర్వకమ్ ।
తథా భాగవతానాఞ్చ నామస్యాన్నామపూర్వకమ్ ॥ ౫౩.

நாமவைஷ்ணவதாஹேதுர் முக்ய இத்யுச்யதே புதை:॥ ௫௨.
யோஜயேந்நாமதாஸாந்தம் பகவந்நாமபூர்வகம்।
ததாபாகவதாநாஞ்ச நாமஸ்யாந்நாமபூர்வகம்॥ ௫௩.

தா-ம். அந்த நாமத்தில் முதலில் பகவந்நாமமும் கடையில் தாஸபதத்தையும் சேர்க்கவும். நாராயணதாஸன் ஸ்ரீநிவாஸதாஸன் என்று. பாகவதர்களுடைய நாமத்தை யிடும்போதும் முதலில் பாகவதர்களுடைய திருநாமத்தையும் கடையில் தாஸபதத்தையும் சேர்க்கவேணும், சடகோபதாஸன் ராமாநுஜதாஸன் என்று. பகவத் ஸம்பந்தம் பெற்று வைஷ்ணவனுக்கு இந்த நாமஸம்ஸ்காரம் முக்யகாரணமாம். இதில்லாவிடில் வைஷ்ணவத்வம் கிடையாதென்று இதின் ஸ்வரூபமறிந்த பெரியோர்கள் சொல்லுவர்கள்.

ఇతి శ్రీపరాశరస్మృత్యాన్తర్గతఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
పుణ్డ్రనామసంస్కారవర్ణనన్నామ ద్వితీయోఽధ్యాయః.

இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

௩-வது அத்யாயம்.

மந்த்ரஸம்ஸ்காரத்தின் க்ரமம்.

పరాశరఉవాచ.

అథాతస్సంప్రవక్ష్యామి మన్త్రదీక్షావిధింపరమ్ ।

பராசர உவாச.

அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி மந்த்ரதீக்ஷாவிதிம்பரம்।

தா-ம். ஸ்ரீபராசரபகவான் ருஷிகளைப் பார்த்துச் சொல்லுகிறார். நாமஸம்ஸ்காரத்தை நிரூபித்தவநந்தரம் நாமஸம்ஸ்காராநந்தரத்திற் செய்யவேண்டிய மந்த்ரஸம்ஸ்காரம் செய்யவேண்டும் ப்ரகாரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

పూర్వాహ్ణే విధివత్స్నాత్వా అర్చయేత్పురుషోత్తమమ్ ॥ ౧.
స్నాతం శిష్యం సమాహూయ హోమం కుర్యాద్విధానతః ।
మన్త్రద్వయేన జుహుయా దాజ్య మష్టోత్తరం శతమ్ ॥ ౨.
వైష్ణవ్యా చైవ గాయత్ర్యా మూలమన్త్రేణ దేశికః ।
తథా పురుషసూక్తేన విష్ణుమన్త్రేణ దేశికః ॥ 3.
హుత్వా ప్రదక్షిణం కృత్వా సశిష్యః ప్రణమేద్గురుః ।

பூர்வாஹ்ணேவிதிவத்ஸ்நாத்வா அர்ச்சயேத்புருஷோத்தமம்|| க.
ஸ்நாதம்சிஷ்யம்ஸமாஹூய ஹோமங்குர்யாத்விதாநத:|
மந்த்ரத்வயேநஜுஹுயா தாஜ்யமஷ்டோத்தரம்சதம்|| உ.
வைஷ்ணவ்யாசைவகாயத்ர்யா மூலமந்த்ரேணதேசிக:|
ததாபுருஷஸூக்தேந விஷ்ணுமந்த்ரேணதேசிக:|| ௩.
ஹுத்வாப்ரதக்ஷிணங்க்ருத்வா ஸசிஷ்ய:ப்ரணமேத்குரு:|

தா-ம். பூர்வாஹ்ணமென்கிறது: உதயம் முதல் ஆறுநாழிகை வரையிலுள்ள காலத்தை. மந்த்ரப்ரதாதாவான ஆசார்யன் தான் உதயத்திலெழுந்திருந்து அதுமுதல் செய்யவேண்டும் பகவந்நாமஸ்மரணம்தந்ததாவநம் முதலாக ஸ்நாநஸந்த்யாவந்தநாதி நித்யகர்மாநுஷ்டாநங்களை பூர்வாஹ்ணத்தில் முடித்துப் பின்பு புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணனை ஷோடசோபசாரங்களினாலாராதித்து, அநந்தரம் ஸ்நாநம் முதலான நித்யகர்மங்களைச்செய்து நிற்கிற சிஷ்யனை யழைத்துத் தன் சமீபத்தில் வைத்துக்கொண்டு பாஞ்சராத்ரம் முதலான க்ரந்தங்களிற் சொல்லிய விதிப்படி விதிபூர்வமாக ப்ரதிஷ்டைபண்ணப்பட்ட அக்நியில் நெய்யினால், திருமந்த்ரம், த்வயம், விஷ்ணுகாயத்ரீ, இந்த மந்த்ரங்களினால் க0அ ஆவ்ருத்தியும், புருஷஸூக்தத்தின் ருக்குக்கள், விஷ்ணுஷடக்ஷரீ, முதலான பகவந்மாஹாத்மய ப்ரதிபாதகங்களான மந்த்ரங்களினால் யதாஸம்பவமும் ஹோமம்பண்ணிப் பின்பந்த அக்நியை சிஷ்யனும் தானுமாய் ப்ரதக்ஷிணம்செய்து தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டியது. ௩ ௨.

తతః కలశ మాధాయ పవిత్రజలసంభృతే ॥ ౪.
తులసీం గన్ధదూర్వాగ్రే కౌశేయం గౌరసర్షపమ్ ।
అభిమన్త్ర్య ద్వయేనాథ మూలమన్త్రేణ మన్త్రవిత్ ॥ ౫.

తేనసమ్మార్జయేచ్ఛిష్యం మన్త్రరత్నేనదేశికః।
సమ్మార్జయేచ్చతంశిష్యం మూలమన్త్రమనుస్మరన్॥ ౬.
ప్రోక్షయేత్సలిలంపశ్చాత్త్రివారంమన్త్రవిచ్చతమ్।

ததஃகலசஆதாய பவித்ரஜலஸம்ப்ருதே|| ௪.
துளஸீம்கந்ததூர்வாக்ரே கௌசேயம்கௌரஸர்ஷபம்|
அபிமந்த்ரத்வயேநாத மூலமந்த்ரேணமந்த்ரவித்|| ௫.
தேநஸம்மார்ஜயேச்சிஷ்யம் மந்த்ரரத்நேநதேசிகஃ|
ஸம்மார்ஜயேச்சதம்சிஷ்யம் மூலமந்த்ரமநுஸ்மரந்|| ௬.
ப்ராசயேத்ஸலிலம்பஶ்சாத் த்ரிவாரம்மந்த்ரவிச்சதம்|

தா-ம். அதுக்கநந்தரத்தில் மந்த்ரவித்தான ஆசார்யன் பரிசுத்தமான ஒரு கலசத்தில் காவேரி முதலான புண்யதீர்த்தங்களின் ஜலத்தை நிறைத்து, அதில் திருத்துழாய் சந்தநம் அறுகம்புல் வெண் கடுகு இவைகளைச் சேர்த்து, பட்டுவஸ்த்ரத்தைச் சுற்றி திருமந்த்ர த்வய மந்த்ரங்களினு லபிமந்த்ரித்து, அந்த ஜலத்தினுல் திருமந்த்ரத்வய மந்த்ரங்களை யநுஸந்தித்துக் கொண்டு சிஷ்யனை ப்ரோக்ஷித்து அந்த ஜலத்தை மூன்றுதரம் ப்ராசநம்பண்ணி வைக்க வேண்டியது. ௬உ.

మూర్ధ్ని హస్తం వినిక్షిప్య దక్షిణం జ్ఞానదక్షిణమ్॥ ౭.
సవ్యఞ్చహృదయే న్యస్య కృపయా వీక్షయేద్గురుః।

மூர்த்நிஹஸ்தம்விநிக்ஷிப்ய தக்ஷிணம்ஜ்ஞாநதக்ஷிணம்|| ௭.
ஸவ்யஞ்சஹ்ருதயேந்யஸ்ய க்ருபயாவீக்ஷயேத்குருஃ|

தா-ம். ஆசார்யன், ஜ்ஞாநப்ரதமான தன்னுடைய வலதுகையை சிஷ்யனுடைய சிரஸ்ஸில் பொருந்தும்படி வைத்து இடதுகையை அவன்மார்பில் வைத்து தயையையுடையனுய் சிஷ்யனைப் பார்க்கவேணும். ௭உ.

స్వాచార్యం హృదయే ధ్యాత్వా జప్త్వా గురుపరంపరామ్॥
తత స్సంప్రార్థయే ద్దేవీం సర్వలోకేశ్వరీం ప్రియామ్।

ஸ்வாசார்யம்ஹ்ருதயேத்யாத்வா ஜபத்வாகுருபரம்பராம்|| ௮.
ததஸ்ஸம்ப்ரார்த்தயேத்தேவீம் ஸர்வலோகேஶ்வரீம்ப்ரியாம்|

தா-ம். அதுக்கநந்தரம் ஆசார்யன், தனக்கு மந்த்ரோபதேசம் பண்ணின வாசார்யனை த்யானித்து ஸ்ரீதரன் பர்யந்தமான குருபரம்

பரையை யநுஸந்தித்து, பின்பு, ஸமஸ்தலோகங்களுக்கும் ஸ்வாமினி
யாய் சேதநர்விஷயத்தில் ப்ரியத்ததையே செய்யுமவளான ஸ்ரீலக்ஷ்மீ
தேவியை மேற்சொல்லுகிறபடி ப்ரார்த்திக்கக்கடவன். அஉ·

మాతా త్వం సర్వలోకానాం సర్వలోకేశ్వరప్రియే ॥ ౯.
శ్రాయయస్వైన మద్యైమ మపరాధశతైర్వృతమ్।
ఏవంరమాంపురస్కృత్య పశ్చాద్దేవంసమాశ్రయేత్॥ ౧౦.

மாதாத்வம்ஸர்வலோகாநாம் ஸர்வலோகேஸ்வரப்ரியே|| ௯,
ஸ்ராயயஸ்வைநமத்யேம மபராதசதைர்வ்ருதம்|
ஏவம்ரமாம்புரஸ்க்ருத்ய பஸ்சாத்தேவம்ஸமாஸ்ரயேத்|| ௧௦·

தா-ம். ஸ்ரீமஹாலக்ஷ்மியே! ஸர்வேஸ்வரன் ஜநங்களுடைய பாபங்களைப்பார்த்து அவர்களைத் தண்டிக்கமுயன்றபோது, இந்தச்சேதநன் அநேகமான அபராதங்களைப்பண்ணி ஸமீபத்தில் நெருங்கவும் யோக்யதை யில்லாதவனு யிருக்கிறான்; தேவரீர் யாரேனும் எவ்விதமான பிழையைச் செய்தபோதிலும் அவைகளைப் பொறுத்து அந்த ஸர்வஜநங்களுக்கும்ஒருவராலுமொருதீங்கும்வாராதபடி காக்கும்படியான மாதாவாயிருக்கிறீர்; ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியான ஸர்வேஸ்வரனுக்குத் தாமெதைச் சொல்லினும் மறுசொல்லில்லாதபடி செய்யும்படி அத்யந்த மபிமதையாயு மிருக்கிறீர். ஆகையால் இவனபராதங்களைப் பொறுப்பித்து இவனை ஸர்வேஸ்வரன் திருவடிகளிலாஸ்ரயிப்பிக்கவேணும். என்றிப்படி ஆசார்யன் பிராட்டியைமுன்னிட்டுக்கொண்டு பிறகு ஸர்வேஸ்வரனைப் பற்றக்கடவன். ௧௦·

నారాయణ దయాసిన్ధో వాత్సల్యగుణసాగర।
త్రాహ్యేనం పాపిన న్దేవ కృపయా సముపాగతమ్॥ ౧౧.
ఏవంప్రపద్య దేవేశ మాచార్యకృపయాస్వయమ్।
స్వాచార్యం హృదయేధ్యాత్వా మన్త్రమధ్యాపయేద్గురుః॥౧౨·

நாராயணதயாஸிந்தோ வாத்ஸல்யகுணஸாகர|
த்ராஹ்யேநம்பாபிநந்தேவ க்ருபயாஸமுபாகதம்|| ௧௧,
ஏவம்ப்ரபத்யதேவேச மாசார்யக்ருபயாஸ்வயம்|
ஸ்வாசார்யம்ஹ்ருதயேத்யாத்வா மந்த்ரமத்யாபயேத்குரு:||

தா-ம். ஸகல ஜநங்களுக்கும் மாதாபிதா என்றிவை முதலாகச் சொல்லப்பட்ட ஸகலவித பந்துவான ஸ்ரிய:பதியே! ஒருவன் துக்

கப்பட்டானாகில் அவனுடைய அந்தத் துக்கத்தைக்கண்டு பொறுக்க மாட்டாமல் தானவனைக் காட்டிலும் அதிகமாய்த் துக்கிக்கையாகிற தயாகுணமென்ன, பசுவானது தன் வயிற்றிற் பிறந்த கன்றின் சரீரத்திலப்போதுள்ள மலங்களை ஹேயமென்று பாராதே தன் நாக்கினால் நக்கி, போக்யமாகக் கொள்ளுமாபோலே தன்னை யாஶ்ரயித்தவன் பக்கல் தோஷமுண்டாகில் அதை ஹேயமாக நினைத்து அவனை விட்டு விடாமல் அங்கீகரிக்கைக்கு ஹேதுவாக அதையே போக்யமாகக் கொள்ளுகையாகிற வாத்ஸல்யகுணமென்ன, இவைகளுக்கு ஸமுத்ரமன்றோ தேவரீர்? எப்போதும் பாபத்தையே பண்ணித் திரிகிறவிவன் தேவரீருடைய க்ருபையினால் அப்பாப வ்ருத்தியில் நின்றும்திரும்பி ஸம்முகனாய்த் தேவரீர் ஸந்நிதியை இப்போதடைந்தான். இவனை க்ருபையினால் ரக்ஷித்தருளவேணும். என்று தன்னுடைய ஆசார்யன் தன்னிடத்தில் பண்ணின க்ருபையினால் இப்படி தான் ஸர்வேஶ்வரனிடத்தில் ப்ரபத்திபண்ணி தன்னுடைய ஆசார்யனை ஹ்ருதயத்தில் த்யாநித்துக்கொண்டு ஆசார்யன் சிஷ்யனுக்கு மந்த்ரோபதேசம் செய்யவேண்டியது. கஉ.

సమానోత్కృష్టరహితం సంసారోచ్ఛేదనంపరమ్।
సర్వదంసర్వపాపఘ్నం మహాప్రియతమం విభోః॥ ౧౩.
అధ్యాపయేన్మన్త్రరత్నం సర్షిఛన్దోధిదైవతమ్।
సన్యాసఞ్చ సముద్రఞ్చ సార్థమధ్యాపయేత్స్వయమ్॥ ౧౪.
వినాపిన్యాసముద్రేచ వినాఛన్దోధిదైవతే।
యస్యోచ్చారణమాత్రేణ సర్వసిద్ధిఫలంలభేత్॥ ౧౫.

ஸமாநோத்க்ருஷ்டரஹிதம் ஸம்ஸாரோச்சேதநம்பரம் |
ஸர்வதம்ஸர்வபாபக்நம்மஹாப்ரியதமம்விபோः || கங.
அத்யாபயேந்மந்த்ரரத்நம் ஸர்ஷிசந்தோதிதைவதம் |
ஸந்யாஸஞ்சஸமுத்ரஞ்ச ஸார்த்தமத்யாபயேத்ஸ்வயம் || கச.
விநாபிந்யாஸமுத்ரேச விநாசந்தோதிதைவதே |
யஸ்யோச்சாரணமாத்ரேண ஸர்வஸித்திபலம்லபேத் || கரு.

தா-ம். இப்பொழுது உபதேசிக்கவேண்டும் மந்த்ரத்துக்கு மந்த்ரரத்நம் என்றுபெயர். எல்லா மந்த்ரங்களைக்காட்டிலும் உயர்ந்த ப்ரபாவமுடைய தாகையால் மந்த்ரரத்நம் என்று த்வத்துக்குத் திருநா

மம். மாஹாத்ம்யத்தில் இதுக்கு ஸமானமாவது இதை யதிகரித்ததாவதுவேறொரு மந்த்ரம் கிடையாது. 'இதை யொருகாலுச்சரித்தால் உடனே ஸம்ஸாரத்தை யறுத்துவிடும். இதரமான எல்லா மந்த்ரங்களினாலும் போக்கத்தக்கதாயும் போக்கத்தகாததாயுமுள்ள ஸகல பாபங்களையும்போக்கி அவைகளால் ஸாத்யமாயும் அஸாத்யமாயுமுள்ள ஸகல பலங்களையும் தானொன்றே கொடுக்கும். இது ஸர்வேஸ்வரனுக்கு மிகவும் ப்ரியமானது. இதை ருஷி, சந்தஸ்ஸு, தேவதை, அங்கந்யாஸ கரந்யாஸங்கள், முத்ரை, இவைகளுடன் உபதேசித்து அர்த்தத்தையும் தானே உபதேசிக்கவேண்டியது. அங்கந்யாஸ கரந்யாஸங்கள், முத்ரை, சந்தஸ்ஸு, தேவதை, இவைகளில்லாமல் வெறும் மந்த்ரத்தை யுச்சரித்தாலும் இதர மந்த்ரங்களின் ஸித்தியினாலுண்டாகும் பலத்தை யடைவன். ௧௫.

అనధీత్య ద్వయంమన్త్రం నవిప్రో వైదికోభవేత్।
మన్త్రరత్నేనరహితం బ్రాహ్మణం దూరతస్త్యజేత్॥ ౧౬.

அநதீத்யத்வயம்மந்த்ரம் நவிப்ரோவைதிகோபவேத்|
மந்த்ரரத்நேநரஹிதம் ப்ராஹ்மணம்தூரதஸ்த்யஜேத்|| ௧௬.

தா-ம். த்வயமந்த்ரத்தை நியமத்துடன் ஆசார்யனிடத்தி லிருந்து எவன் க்ரஹிக்கவில்லையோ? அவன் ப்ராஹ்மணகுலத்திற் பிறந்தபோதிலும் வேதோக்தமான ஒரு கர்மங்களுக்கு முபயோகியாக மாட்டான். ஆகையால் அவனை தூரத்திலே விட்டுவிடவேண்டியது.

అధ్యాపయే ద్ద్వయంమన్త్ర మాచార్య శ్శిష్యవత్సలః।
అధ్యాపయే త్తతఃపశ్చా న్మన్త్ర మష్టాక్షరంతథా॥ ౧౭.

அத்யாபயேத்த்வயம் மந்த்ர மாசார்யச்சிஷ்யவத்ஸலஃ|
அத்யாபயேத்ததஃ பச்சாந மந்த்ரமஷ்டாக்ஷரம்ததா|| ௧௭.

தா-ம். ஆசார்யன் சிஷ்யனிடத்தில் ப்ரீதியுடையனாய் த்வயமந்த்ரத்தை முன்னே உபதேசித்து அதுக்கநந்தரத்தில் அஷ்டாக்ஷரத்தையும் ந்யாஸம் முத்ரை ருஷி தேவதைகளோடு உபதேசிக்க வேண்டும். ௧௮.

అచక్రధారిణం విప్రం యోఽధ్యాపయతి దేశికః।
సగురు ర్నరకంయాతి కల్పకోటిశతంద్విజాః॥ ౧౮.

அசக்ரதாரிணம்விப்ரம் யோத்யாபயதிதேசிகஃ
ஸகுருர்நரகம்யாதி கல்பகோடிசதம்த்விஜாஃ ௧௮.

தா-ம். எந்த ஆசார்யன், ஸமாஶ்ரயணமில்லாத ப்ராஹ்மணனுக்கு மந்த்ரத்தை யுபதேசிக்கிறானோ? ருஷிகளே! அவன் நரகத்தை யடைந்து அநேக கல்பங்கள் அங்கேயே வஸிப்பன். ௧௮.

తస్మా త్తాపాదిసంస్కారా స్సర్వమన్త్రేషుస త్తమాః ।
అధ్యాపయే త్తతఃపశ్చా దన్యథా నరకం వ్రజేత్॥ ౧౯.

தஸ்மாத்தாபாதிஸம்ஸ்காராஸ் ஸர்வமந்த்ரேஷுஸத்தமாஃ|
அத்யாபயேத்ததஃ பஶ்சாதந்யதாநரகம்வ்ரஜேத்|| ௧௯.

தா-ம். ஆகையால் ஸமாஶ்ரயணம் முதலான கீழ்ச்சொன்ன ஸம்ஸ்காரங்கள் எந்தமந்த்ரத்தை யுபதேசித்துக் கொண்டபோதிலும் அவஶ்யம் செய்துகொள்ளத் தக்கதுகள். அவைகளைச் செய்தே மந்த்ரத்தை யுபதேசிக்கவேண்டும். இல்லாவிடில் நரகத்தை யடைவன்.

ఏకస్మిన్దివసేవాపి కృత్వాతాపాదిసంస్క్రియాః॥
పృథక్పృథక్చానుపూర్వ్యా సర్వఙ్కుర్యా దతన్ద్రితః॥ ౨౦.

ஏகஸ்மிந்திவஸேவாபி க்ருத்வாதாபாதிஸம்ஸ்க்ரியாஃ|
ப்ருதக்ப்ருதக்சாநுபூர்வ்யா ஸர்வங்குர்யாததந்த்ரிதஃ|| ௨௦.

தா-ம். ஸமாஶ்ரயணம் முதலாகச் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரங்களை யெல்லாம் ஒருதிநத்திலாவாது, வெவ்வேறு திநங்களிலாவது, சொன்ன க்ரமப்படி ஒன்றும் விடாமல் செய்யவேண்டும். ௨௦.

అధీత్య మన్త్ర మాచార్యం పూజయే ద్భక్తితో ద్విజః।
ఆచార్యాధీనవృత్తిస్తు యావజ్జీవం భవేత్సదా॥ ౨౧.

அதீத்யமந்த்ரமாசார்யம் பூஜயேத்பக்திதோத்விஜஃ|
ஆசார்யாதீநவ்ருத்திஸ்து யாவஜ்ஜீவம்பவேத்ஸதா|| ௨௧.

தா-ம். சிஷ்யன் மந்த்ரத்தை நியமத்துடன் கற்றபின்பு ஆசார்யனை பக்தியுக்தனாய்ப் பூஜிக்கக்கடவன், அநந்தரம் ப்ராணனுள்ள வளவும் எப்போதும் ஆசார்யனுக்குப் பரதந்த்ரமான வ்ருத்தியையுடையனாயிருக்கக்கடவன். அதாவது - ஆசார்யன் அமுதுசெய்த பின்பு அந்த சேஷத்தைத் தான் புஜித்தல், அவனைக் காட்டிலும் தாழ்ந்த இடத்தில் உட்கார்தல், படுத்தல், பின்செல்லல், ஸமித்து குசம் திருத்துழாய் இவைகளைக்கொண்டு வருதல், இவை முதலானவைகள்.

హోమశేషంసమాప్యాథ బ్రాహ్మణాన్భోజయేచ్ఛుభాన్।
యావచ్ఛరీరపాతన్తు ద్వయమావర్తయేన్మనుమ్॥ ౨౨.

ஹோமசேஷம்ஸமாப்யாத ப்ராஹ்மணாந்போஜயேச்சுபாந்|
யாவச்சரீரபாதந்துத்வய மாவர்தயேந்மநும்|| ௨௨.

தா-ம். சிஷ்யனுக்கு ஆசார்யன் பக்கல் செய்யவேண்டும் முறையைச் சொல்லி ஸம்ஸ்காராந்தத்தில் ஆசார்யன்செய்யவேண்டும் க்ருத்யத்தைச்சொல்லுகிறார். மந்த்ரோபதேசாநந்தரத்தில் செய்யவேண்டும் ஹோமத்தைச் செய்து முடித்து நல்லொழுக்கமுடைய ப்ராஹ்மணோத்தமர்களை அமுது செய்விக்கவேண்டியது. பிற்பாடுசரீரமுள்ளவளவிலும் மந்த்ரராஜனை த்வயத்தை அநுஸந்திக்கக் கடவன்.

ఇతి శ్రీపరాశరస్మృతౌ ఉత్తరఖణ్డే మన్త్రసంస్కార
వర్ణనన్నామ తృతీయోఽధ్యాయః.

௩-வது அத்யாயம் முற்றிற்று.

---

௪ - வது அத்யாயம்.

யாகஸம்காரத்தின் க்ரமம்.

శ్రీపరాశరఉవాచ.

శుభకాలే విధానేన ప్రణిపత్య తతో గురుమ్।
అస్యప్రసాదలబ్ధన్తు గృహీత్వావిగ్రహంహరేః॥ ౧.
శ్రీభూమినీళాసహితం సాయుధంసపరిచ్ఛదమ్।
అర్చయేద్విగ్రహన్నిత్యం యావత్కాలమతన్ద్రితః॥ ౨.

ஸ்ரீபராசரஉவாச.

சுபகாலேவிதாநேந ப்ரணிபத்யததோகுரும்|
அஸ்யப்ரஸாதலப்தந்து க்ருஹீத்வாவிக்ரஹம்ஹரே:|| ௧.
ஸ்ரீபூமிநீளாஸஹிதம்ஸாயுதம் ஸபரிச்சதம்|
அர்ச்சயேத்விக்ரஹந்நித்யம் யாவத்காலமதந்த்ரித:|| ௨.

தா-ம். பராசரர் சொல்லுகிறார்.—தாபம் முதல் மந்த்ரக்ரஹண பர்யந்தமான நாலு ஸம்ஸ்காரங்களுக்குப் பிற்பாடு, சுபமான திதி

வாரநக்ஷத்ரங்கள் கூடின தினத்தில் நித்யகர்மங்களை யநுஷ்டித்தவ ஞய் ஆசார்யன் ஸந்நிதியில் தெண்டன் ஸமர்ப்பித்து அவனநுக்ரஹி த்துத்தந்த பகவானுடைய அர்ச்சாவிக்ரஹத்தை, ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளென்ன, திருவாழி முதலான ஆயுதங்களென்ன, அநந் தன் முதலான பரிஜநங்களென்ன, இவைகளுடன் கூட எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஆயுஸ்ஸுள்ள வரையிலும் சோம்பலைவிட்டுத் திருவாராதநம் செய்யக்கடவன்.

శ్రౌతస్మార్తాగమోక్తానాం గృహీత్వాసమ్మతంగురోః।
అర్చయేచ్ఛ్రద్ధయానిత్యం దేవ న్దహరవాసినమ్॥ ౩.

ஶ்ரௌதஸ்மார்தாகமோக்தாநாம் க்ருஹீத்வாஸம்மதம்குரோः|
அர்ச்சயேச்ச்ரத்தயாநித்யம் தேவந்தஹரவாஸிநம்|| ௩.

தா-ம். வேதங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் ஸ்ரீபாஞ்சராத்ர த்திலும் சொல்லப்பட்ட திருவாராதந க்ரமங்களில் தன்னுடைய ஆசார்யனுக்கு எது இஷ்டமோ? அந்த க்ரமத்தினால் ஸர்வாந்தர்யா மியான ஸ்ரீமந்நாராயணனை மிக ஶ்ரத்தையுடன் தினந்தோறு மாராதி க்கக்கடவன். ௩.

అర్చయేత్పూర్వవత్స్నాత్వా హరేస్సంపూజ్యవిగ్రహమ్।
హోమం కుర్యాద్విధానేన శ్రీమదష్టాక్షరేణవై॥ ౪.
మన్త్రద్వయేనచతథా హోతవ్యంవిధినాహవిః।
సూక్తేనచతథా హోమః పౌరుషేణవిధీయతే॥ ౫.
శత మష్టాక్షరాద్ధోమో మన్త్రాభ్యాఞ్చ తథోదితః।
సూక్తేనప్రత్యృచం హోమే హోతవ్యందధినాహవిః॥ ౬.
తత్తన్నామ్నాతథైవైకముద్దిశ్యావరణాన్సురాన్।
హుత్వాప్రదక్షిణంకృత్వానమస్కృత్వాజనార్దనమ్॥ ౭.
తస్మైతద్విగ్రహన్దత్వావృత్తింసమ్యక్ప్రచోదయేత్।

அர்ச்சயேத்பூர்வவத்ஸ்நாத்வாஹரேஸ்ஸம்பூஜ்யவிக்ரஹம்|
ஹோமங்குர்யாத்விதாநேநஶ்ரீமதஷ்டாக்ஷரேணவை|| ௪.
மந்த்ரத்வயேநசததாஹோதவ்யம்விதிநாஹவிः|
ஸூக்தேநசததாஹோமःபௌருஷேணவிதீயதே|| ௫.

சதமஷ்டாக்ஷராத்ஹோமோ மந்த்ராப்யாஞ்சததோதித:।
ஸூக்தேநப்ரத்ய்ருசம்ஹோமே ஹோதவ்யம்விதிநாஹவி:॥ ௬.

தத்தந்நாம்நாததைவைக முத்திஸ்பாவராணந்ஸுராந்।
ஹுத்வாப்ரதக்ஷிணங்க்ருத்வா நமஸ்க்ருத்வாஜநார்த்தநம்॥ ௭.
தஸ்மைதத்விக்ரஹந்தத்வா வ்ருத்திம்ஸம்யக்ப்ரசோதயேத்।

தா-ம். ஆசார்யன் ப்ராத:காலத்தில் ஸ்நாநம் முதலான நித்ய கர்மங்களை யநுஷ்டித்து, சிஷ்யனுக்கு எழுந்தருளப் பண்ணிக்கொடுக்கவேண்டிய திவ்யமங்கள விக்ரஹத்துக்குத் திருவாராதநம் கண்டருளப்பண்ணி, விதிபூர்வகமாய் ப்ரதிஷ்டை பண்ணப்பட்ட அக்நியில் ஸ்ரீமதஷ்டாக்ஷரத்தினாலும், த்வயத்தினாலும், புருஷஸூக்தத்தினாலும் ஹவிஸ்ஸை ஹோமம் பண்ணவேண்டியது. அதில் திருவஷ்டாக்ஷரத்தினாலும் த்வயத்தினாலும் நூறுநூறு ஆவ்ருத்தியும், புருஷஸூக்தத்தினுடைய பதினாறு ருக்குக்களினால் பதினாறு ஆவ்ருத்தியும் நியமத்துடன் ஹோமம் செய்யவேண்டியது. விமாநபாலகர்களென்ன, ஸுதர்ஸநாநந்த கருடாதிகளென்ன, பகவானை யநுஸரித்திருக்கிற இந்த தேவதைகளை யுத்தேசித்து ஒவ்வொரு ஆவ்ருத்தி அவ்வவர்கள் நாமங்களினாலே ஹோமம் செய்யவேணும். ஹோமம் முடிந்த பின்பு பகவத் விக்ரஹத்தையும் அக்நியையும் ப்ரதக்ஷிணம் பண்ணி, தெண்டன் ஸமர்ப்பித்து, அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை சிஷ்யனுக்கு எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து எப்போது மாராதிக்கும்படி நன்றா யுபதேசிக்கக்கடவன். ௭௨.

యజ్ఞకర్మవిధానేన సమ్యక్స్నాత్వా గురు స్తదా ॥ ౮.
యాజయే ద్వైష్ణవం భక్త్యా వైష్ణవా న్పరితోషయేత్।

யஜ்ஞகர்மவிதாநேந ஸம்யக்ஸ்நாத்வாகுருஸ்ததா॥ ௮.
யாஜயேத்வைஷ்ணவம் பக்த்யாவைஷ்ணவாந்பரிதோஷயேத்।

தா-ம். ஆசார்யன் மாத்யாஹ்நிக ஸ்நாநத்தைச் செய்து அப்பொழுது யாக ஸம்ஸ்காரத்திற் சொல்லிய விதிப்படி வைஷ்ணவனான சிஷ்யனைக்கொண்டு பகவதாராதநமாகிற யாகத்தைச் செய்விக்கவேண்டியது. அநந்தரம் பக்தியுக்தனாய் ஸ்ரீவைஷ்ணவர்களை யமுது செய்விக்க வேண்டியது. ௮௨.

ఏవం యాగాన్తసంస్కారాః కర్తవ్యా విధివ ద్ద్విజాః॥ ౯
బ్రాహ్మణానాం విశేషేణ పారమైకాన్త్యసిద్ధయే।

5

ஏவம்யாகாந்தஸம்ஸ்காரா꞉ கர்த்தவ்யாவிதிவத்த்விஜா꞉॥ ௯.
ப்ராஹ்மண்யாம்விஶேஷேண பாரமைகாந்த்யஸித்தயே।

தா-ம். மஹர்ஷிகளே! இவ்விதமாய் தாபம் முதல் யாகம்வரையிலுமான ஸம்ஸ்காரங்களை ஸர்வேஶ்வரனிடத்திலேயே அந்தரங்கதை ஸித்திக்கைக்காக எல்லாரும் விதிபூர்வமாய்ச் செய்து கொள்ள வேணும். அதிலும் ப்ராஹ்மண்யத்துக்கு இவைகள் முக்யகாரணமாகையால் ப்ராஹ்மணர்களவஶ்யம் செய்துகொள்ளவேணும். ௯௨.

ఇతి శ్రీపరాశరస్మృతౌ వుత్తరఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
యాగసంస్కారవర్ణనన్నామ చతుర్థోఽధ్యాయః.

௪-வது அத்யாயம் முற்றிற்று.

ரு - வது அத்யாயம்.

இனி பகவதாராதநமும் ஆஶ்ரமதர்மமும் சொல்லுகிறது.

శ్రీపరాశర ఉవాచ.

నిత్య మభ్యర్చయే ద్విష్ణుం పురాణం పురుషోత్తమమ్।
అప్సు వ్యోమ్ని తథాఽర్చాయాం వహ్నౌ హృది తథా గురౌ॥
త్రికాల మర్చయే ద్దేవం ప్రీతిమాన్ సువిశేషతః।

ஸ்ரீபராசர உவாச.

நித்யமப்யர்ச்சயேத் விஷ்ணும் புராணம்புருஷோத்தமம்।
அப்ஸுவ்யோம்நிததார்ச்சாயாம் வஹ்நௌஹ்ருதிததாகுரௌ॥ ௧.
த்ரிகாலமர்ச்சயேத்தேவம் ப்ரீதிமாந்ஸுவிசேஷத꞉।

தா-ம். ஸர்வவ்யாபியாய் ஸர்வோத்தமனாய் அநாதியாயுள்ள ஸ்ரீமந்நாராயணனை, ஜலத்திலும், ஆகாசத்திலும், அர்ச்சாவிக்ரஹத்திலும், அக்நியிலும், ஹ்ருதயத்திலும், ஆசார்யனிடத்திலும் இநந்தோறும் மூன்று காலங்களிலும் மிகுந்த பக்தியுடையவனாய் அர்ச்சிக்கக்கடவன். ௧௨.

స్నానకాలే హరిం సమ్యక్పూజయే జ్జలశాయినమ్॥ ௨.
సన్ధ్యాకాలే తథా వ్యోమ్ని పూజయే ద్రవిమణ్డలే।

ప్రతిమాస్వర్చయే ద్దేవ మగ్నౌ హోమై స్తథా ప్రభుమ్॥ 3.
ప్రాణాగ్నౌ హోత్రసమయే।

ஸ்நாநகாலேஹரிம்ஸம்யக் பூஜயேஜ்ஜலசாயிநம்|| ௨.
ஸந்த்யாகாலேததாவ்யோம்நி பூஜயேத்ரவிமண்டலே|

ப்ரதிமாஸ்வர்ச்சயேத்தேவ மக்நௌஹோமைஸ்ததாப்ரபும்||௩.
ப்ராணாக்நிஹோத்ரஸமயே|

தா-ம். அதில் ஸ்நாநகாலத்தில் ஜலத்தில் பள்ளிகொண்ட விஷ்ணுவை ஜலத்தில் ஆராதிக்கவேணும். ஸந்த்யாவந்தநம் செய்யும்போது ஆகாசத்தில் ஸூர்யமண்டலத்திலும், கீழ்ச்சொன்ன யாகாநுஷ்டாந காலத்தில் அர்ச்சாவிக்ரஹத்திலும், ஹோமகாலத்தில் அக்நியிலும், போஜநகாலத்தில் ப்ராணாஹுதி பண்ணும்போது ஹ்ருதயத்திலும் ஸர்வஸ்வாமியான அவனை ஆராதிக்கவேணும்.

జపే దష్టాక్షరం బుధః।
అష్టోత్తరశతం వాపి హ్యష్టావింశతిమేవవా॥ ౪.

యథాశక్తి జపే న్మన్త్రం నిత్య మేవ మతన్ద్రితః।
తదర్థంచిన్తయే న్నిత్యం యావద్దేహనిపాతనమ్। ౫.

ஜபேதஷ்டாக்ஷரம்புதஃ|
அஷ்டோத்தரஶதம் வாபி ஹ்யஷ்டாவிம்ஶதிமேவவா|| ௪.

யதாஶக்திஜபேந்மந்த்ரம் நித்யமேவமதந்த்ரிதஃ|
தததர்த்தம்சிந்தயேந்நித்யம் யாவத்தேஹநிபாதநம்|| ௫.

தா-ம். சரீரம் நசிக்குமளவும் நித்யந்தோறும் திருவஷ்டாக்ஷரத்தை நூற்றெட்டு தரமாவது இருபத்தெட்டு தரமாவது தன் சக்திக்கு அநுகுணமாக ஜபித்து அதினர்த்தத்தையும் அநுஸந்தாநம் பண்ணக்கடவன். ௫௨.

అలాభే ప్రతిమాయాస్తు శుచౌ దేశే మనోహరే।
స్థణ్డిలే పురుషం ధ్యాత్వా పూజయే న్మనసైవతు। ౬.

அலாபேப்ரதிமாயாஸ்து ஶுசௌதேஶேமநோஹரே|
ஸ்தண்டிலேபுருஷம்த்யாத்வா பூஜயேந்மநஸைவது|| ௬.

தா-ம். அர்ச்சாவிக்ரஹம் அகப்படாவிடில் பரிசுத்தமாய் அழகாய் புல்லு முதலானவைகளில்லாத தேசத்திலே சித்ரத்தை யெழுதி அதில் பகவானை மனதினால் த்யானிக்கவேண்டியது. ௬ உ.

జపే ద్ద్వయ మన్త్రరత్నం ధ్యాయ న్సర్వగతం హరిమ్।

ஜபேத்த்வயம்மந்த்ரரத்நம் த்யாயந்ஸர்வகதம்ஹரிம்|

தா-ம். மந்த்ரங்களில் உத்க்ருஷ்டமான த்வயமந்த்ரத்தை ஸர்வவ்யாபியான பரமாத்மாவை ஸ்மரித்துக்கொண்டு ஜபிக்கவேணும்.

పాషణ్డినః పాశుపతా న్వికర్మస్థా ననీశ్వరాన్॥ ౭.
నసంభాషేత సతతం వాఙ్మాత్రేణాపినార్చయేత్।

பாஷண்டிந: பாசுபதாந் விகர்மஸ்தாநநீஸ்வராந்|| ௭.
நஸம்பாஷேதஸததம் வாங்மாத்ரேணாபிநார்ச்சயேத்|

தா-ம். பகவத் பாகவதர்களோடு த்வேஷம் பண்ணித் திரிகிற பாஷண்டிகளோடும், பாசுபதம் என்கிற சைவமதத்தை யவலம்பித்தவர்களோடும், கர்மப்ரஷ்டர்களோடும் ஈஸ்வரனொருவனில்லையென்று சொல்லுகிற நாஸ்திகர்களோடும் எப்போதும் ஸம்பாஷிக்கவுங் கூடாது; அவர்களை உத்கர்ஷித்துச் சொல்லவுங் கூடாது. ௭ உ.

ఉపవీతం శిఖాబన్ధ మూర్ధ్వపుణ్డ్రం తథైవచ॥ ౮.
పద్మాక్షమాలాం కౌశేయం సతతం ధారయే ద్ద్విజః।

உபவீதம்சிகாபந்த மூர்த்வபுண்ட்ரம்ததைவச|| ௮.
பத்மாக்ஷமாலாம்கௌசேயம் ஸததம்தாரயேத்த்விஜ:|

தா-ம். ப்ராஹ்மணன் பூணூலும் குடுமியும் ஊர்த்வபுண்ட்ரமும் தாமரைமணி மாலையும் வெண்வஸ்திரமும் எப்போதுந்தரிக்கவேணும். ௮ உ.

ఏకోపవీతం ధార్యం స్యా ద్యతీనాం బ్రహ్మచారిణామ్॥ ౯.
గృహస్థానాం వనస్థానా ముపవీతద్వయం విదుః।

ஏகோபவீதம்தார்யம்ஸ்யாத் யதீநாம்ப்ரஹ்மசாரிணாம்|| ௯.
க்ருஹஸ்தாநாம்வநஸ்தாநா முபவீதத்வயம்விது:|

தா-ம். அதில் ப்ரஹ்மசாரிக்கும் ஸந்யாஸிக்கும் ஒரு பூணூலும், க்ருஹஸ்தனுக்கும் வாநப்ரஸ்தனுக்கும் இரண்டு பூணூலும் தார்யங்களென்று பெரியோர்கள் சொல்லுவர்கள். ௯ உ.

మౌఞ్జీ మజినదణ్డౌచ బ్రహ్మచారీధరేత్సదా। ౧౦.

மௌஞ்சிமஜிநதண்டௌச ப்ரஹ்மசாரீதரேத்ஸதா|| ௧௦.

தா-ம். முஞ்சமென்னும் புல்லினால் பின்னப்பட்ட மௌஞ்சியென்பதையும் க்ருஷ்ணாஜிநத்தையும் பாலாசம் முதலான தண்டத்தையும் ப்ரஹ்மசாரி தரிக்கக்கடவன். ௧௦.

కటిసూత్రఞ్చ కౌపీనం శుక్లవస్త్రద్వయం శుభమ్।
వలయాద్యఙ్గులీయాది గృహస్థానాంవిధీయతే॥ ౧౧.

கடிஸூத்ரஞ்சகௌபீநம் சுக்லவஸ்த்ரத்வயம்சுபம்|
வலயாத்யங்குலீயாதி க்ருஹஸ்தாநாம்விதீயதே|| ௧௧.

தா-ம். அரைநாண், கௌபீநம், மங்களகரமான இரண்டு வெண் வஸ்த்ரம், கைவளை, மோதிரம் முதலான ஆபரணங்கள், இவைகளெப்போதும் க்ருஹஸ்தர்களுக்கு தார்யங்களாக விதிக்கப்பட்டன. ௧௧.

శ్మశ్రులోమ జటాఞ్చైవ తథా వల్కలధారణమ్।
చీరాజినతపోఽరణ్యాం వనస్థస్య విధీయతే॥ ౧౨.

ஸ்மஸ்ருலோமஜடாஞ்சைவ ததாவல்கலதாரணம்|
சீராஜிநதபோரண்யம் வநஸ்தஸ்யவிதீயதே|| ௧௨.

தா-ம். மீசை மயிர் ஜடை இவைகளை க்ஷௌரஞ் செய்யாமல் வளர்த்தல், அரையில் மரவுரியைத் தரித்தல், மரவுரியாவது க்ருஷ்ணாஜிநமாவது உத்தரீயமாகத் தரித்தல், தபஸ்ஸுபண்ணுதல், காட்டில் வஸித்தல் இவைகள் வாநப்ரஸ்தனுக்கு விதிக்கப்பட்டன. ௧௨.

త్రిదణ్డ ముపవీతఞ్చ శిక్యంకాషాయమమ్బరమ్।
కమణ్డలు భైక్షచర్యా యతీనా స్తువిధీయతే॥ ౧3.

த்ரிதண்டமுபவீதஞ்ச சிக்யங்காஷாயமம்பரம்|
கமண்டலுர்பைக்ஷசர்யா யதீநாந்துவிதீயதே|| ௧௩.

தா-ம். த்ரிதண்டம், யஜ்ஞோபவீதம், பிக்ஷையை வாங்குகைக்காக முடிவிட்டு வைத்திருக்கும் சிக்யம், காஷாயவஸ்த்ரம், கமண்டலு இவைகளைத் தரித்தல், பிக்ஷாடநஞ் செய்தல் இவை யதிகளுக்கு விதிக்கப்பட்டன. ௧௩.

సాధారణస్తు సర్వేషాంధర్మస్తు మునిభిస్స్మృతమ్।
అభక్ష్యభక్షణం హింసా పరస్త్రీష్వభిలాషితా॥ ౧౪.
పరేషాందోషకథన మనర్థాయప్రకల్పతే।

ஸாதாரணந்து ஸர்வேஷாம் தர்மந்துமுநிபிஸ்ஸ்ம்ருதம்|
அபக்ஷ்யபக்ஷணம்ஹிம்ஸா பரஸ்த்ரீஷ்வபிலாஷிதா|| ௧௪.
பரேஷாம்தோஷகதந மநர்த்தாயப்ரகல்பதே|

தா-ம். இந்த நாலு ஆஶ்ரமத்திலுள்ளவர்களுக்கும் நிஷித்தமான கர்மங்களைச் செய்யாதொழிவது பொதுவான தர்மமென்று ருஷிகள் சொன்னார்கள். நிஷித்தங்களாவது வென்றால்-புஜிக்கத்தகாததென்று சாஸ்த்ரத்திலும் ஸிஷ்டாசாரத்திலும் கழித்து விட்டதை புஜித்தல், ஒரு ஜீவனைக் கொல்லுதல், பரஸ்த்ரீயை இச்சித்தல், பிறர் தோஷத்தைச் சொல்லுதல், மற்றும் பிறர் வருத்தமுறும் வ்யாபாரத்தைச் செய்தல் இவைகள். ௧௪ உ.

పూర్వాశ్రమాత్తురీయస్తు నారీసఙ్గం విసర్జయేత్॥ ౧౫.
గృహస్థశ్చ వనస్థశ్చ స్వదారనిరతావుభౌ।

பூர்வாஶ்ரமாத்துரீயஸ்து நாரீஸங்கம்விஸர்ஜயேத்|| ௧௫.
க்ருஹஸ்தஶ்சவநஸ்தஶ்ச ஸ்வதாரநிரதாவுபௌ|

தா-ம். க்ருஹஸ்தாஶ்ரமத்தையும் வாநப்ரஸ்தாஶ்ரமத்தையும் விட்டு ஸந்யாஸியாகும்போது தன் ஸ்த்ரீயை விட்டுவிட வேண்டியது. க்ருஹஸ்தனும் வாநப்ரஸ்தனும் தங்கள் ஸ்த்ரீகளிடத்திலேயே போகேச்சையுடையவர்களாக ஆகக்கடவர்கள். ௧௫ உ.

శ్రుతిస్మృత్యుదితం సమ్యఙ్నిత్యమాచారమాచరేత్॥ ౧౬.

ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் ஸம்யங் நித்யமாசாரமாசரேத்|| ௧௬.

தா-ம். எந்த வர்ணத்துக்கு எந்த ஆஶ்ரமத்துக்கு எந்த ஆசாரம் வேதத்திலும் தர்மசாஸ்த்ரத்திலுஞ் சொல்லியிருக்கிறதோ? அந்த வர்ணத்தில் அந்த ஆஶ்ரமத்திலுள்ளவன் அதே ஆசாரத்தைச் செய்யக்கடவன். ௧௬.

பாஷண்டிலக்ஷணம்.

శ్రుతిస్మృత్యుదితం నిత్యం యస్తు నాచరతి ద్విజః।
స పాషణ్డీతి విజ్ఞేయః సర్వకర్మసుగర్హితః॥ ౧౭.

ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் நித்யம்யஸ்துநாசாதித்விஜ:|
ஸபாஷண்டஇதிவிஜ்ஞேயஸ் ஸர்வகர்மபஹிஷ்க்ருத:|| ௧எ.

தா-ம். வேதங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் எதை விசேஷ தர்மமென்றும் நித்யமாக அநுஷ்டிக்கத் தக்கதென்றும் சொல்லியிருக்கிறதோ? அதை எவனொருவன் அநுஷ்டியாமலிருக்கிறானோ? அந்த ப்ராஹ்மணனைப் பாஷண்டியென்று அறியவும். அவன் ஒரு கர்மங்களிலு முபயோகிக்கமாட்டான். ௧எ.

ப்ரஹ்மசாரி செய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

సాయం ప్రాత స్సమిద్ధోమ స్స్వాధ్యాయాధ్యయనం జపః।
గృహస్థానాంగృహే భైక్షవిధిస్తు బ్రహ్మచారిణామ్॥ ౧౮.

ஸாயம்ப்ராதஸ்ஸமித்தோமஸ் ஸ்வாத்யாயாத்யயநம்ஜப:|
க்ருஹஸ்தாநாம்க்ருஹேபைக்ஷவிதிஸ்துப்ரஹ்மசாரிணாம்|| ௧அ.

தா-ம். உதயகாலத்திலும் ஸாயங்காலத்திலும் பலாசம்ஸமித்தினால் ஹோமம், அதாவது - ஸமிதாதாநம், வேதாத்யயநம், காயத்ரீ திருவஷ்டாக்ஷரம் முதலிய மஹாமந்த்ரங்களின் ஜபம், க்ருஹஸ்தர்களுடைய க்ருஹத்தில் பிக்ஷைகொள்ளுதல்,—அதாவது சாப்பிடுகைக்காக நாலு ஐந்து க்ருஹஸ்தர்களிடம் யாசித்து அந்நத்தை ஸம்பாதித்தல், இவைகளே ப்ரஹ்மசாரி நித்யமாகச் செய்யவேண்டும்.

க்ருஹஸ்தன் செய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

సాయంప్రాతర్ద్విజఃకుర్యా దగ్నిహోత్రం సదా గృహీ।
తథైవ పఞ్చయజ్ఞాది యజ్ఞహోమం సమాచరేత్॥ ౧౯.

ஸாயம்ப்ராதர்த்விஜ:குர்யா தக்நிஹோத்ரம்ஸதாக்ருஹீ|
ததைவபஞ்சயஜ்ஞாதி யஜ்ஞஹோமம்ஸமாசரேத்|| ௧௯.

தா-ம். க்ருஹஸ்தன் தினந்தோறும் உதயகாலம் சாயங்காலங்களில் அக்நிஹோத்ரமென்கிற ஹோமத்தைச் செய்யக்கடவன். ப்ரதிதிநம் ப்ரஹ்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம் ஆகிற பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யக்கடவன். ப்ரஹ்மயஜ்ஞமாவது - வேதாத்யயநம்; தேவயஜ்ஞமாவது - ஹோமம் (ஔபாஸநம்); பித்ருயஜ்ஞமாவது - பித்ருதர்ப்பணம்; பூதயஜ்ஞமாவது - காகம் முதலிய பூதங்களுக்கு அந்நத்தினால் பலியிடுதல்; மநுஷ்யயஜ்ஞமாவது - அதிதியைப் பூஜித்தல். அதிதியென்பவன் - தான் போஜநம் செய்யும் ஸமயத்தில் வந்த வழிப்போக்கன்; அவன் ஜாதி

யில் தனக்குக் குறைந்திருந்தால் அதிதியாகமாட்டான். அப்படியே தர்சபௌர்ண மாஸங்கள் முதலாகிய யஜ்ஞங்களையும் செய்யக் கடவன். ௧௯.

ஸந்யாஸிசெய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

స్నానం త్రిసంధ్యమపిహి యతీనాన్తు విధీయతే।
జపమౌనతపోయోగ బ్రహ్మచర్యదమాస్తథా॥ ౨౦.

కామక్రోధా తథాలోభ మోహమానమదాంస్త్యజేత్।
మత్సరద్వేషరూక్షోక్తి నిద్రాలస్యాదివర్జయేత్॥ ౨౧.

ஸ்நாநம்த்ரிஸந்த்யமபிஹி யதீநாந்துவிதீயதே।
ஜபமௌநதபோயோக ப்ரஹ்மசர்யதமாஸ்ததா॥ ௨௦.

காமக்ரோதௌ ததாலோப மோஹமாநமதாம்ஸ்த்யஜேத்।
மத்ஸரத்வேஷரூக்ஷோக்தி நித்ராலஸ்யாதிவர்ஜயேத்॥ ௨௧.

தா-ம். ஸந்யாஸி உதயம், மத்யாஹ்நம், ஸாயங்காலம் ஆகிய இம் மூன்று காலங்களிலும் ஸ்நாநம் செய்யவேணும். திருவஷ்டாக்ஷரம் முதலிய மஹாமந்த்ரங்களை ஜபிக்கவேணும். வ்யர்த்தமாய்ப் பேசக் கூடாது. சரீரமிளைக்கும்படி உபவாஸம் சாந்த்ராயணம் முதலானவைகளைச் செய்யவேண்டும். பரமாத்மாவினிடத்தில் பக்திசெய்ய வேணும். ஸ்த்ரீயோடு ஸம்பாஷணம் முதலியவைகளும் செய்யக் கூடாது. இந்த்ரியங்களை அதன் வழிகளில் யதேச்சையாய்ப் போக வொட்டாமல் அடக்கவேணும். ஜகத்திலாவது பந்துக்களிடத்தி லாவது ப்ரீதிவைக்கக் கூடாது. ஒருவரைக் கோபிக்கக் கூடாது. பிறர் வஸ்துவை ஆசைபடக்கூடாது. நச்வரமான இந்த லோகத்தை சாச்வதமென்றெண்ணி மோஹிக்கக்கூடாது. நான் பெரியனென்கிற கர்வம்கூடாது. ஒருவன் பரிஹாஸம் செய்தால் அதினால் வெட்கப்படக்கூடாது. ஒருவன் மேன்மையைக்கண்டு பொறாமை யடையக்கூடாது. ஒருவனோடு த்வேஷம் செய்யக்கூடாது. ஒருவனை கோவ வார்த்தை சொல்லக்கூடாது. தூக்கம், சோம்பல் இவை முதலியவைகளை விட்டுவிடவேணும். ௨௧.

ఇతి శ్రీపరాశరస్మృతౌ ఉత్తరఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
భగవదారాధనాశ్రమధర్మవర్ణనన్నామ పఞ్చమోఽధ్యాయః,

ரு-வது அத்யாயம் முற்றிற்று.

௬-வது அத்யாயம்.

శ్రీపరాశరఉవాచ.

విస్తరేణ బ్రవీమ్యత్ర విష్ణోరాశ్రయణక్రియామ్।

ஸ்ரீபராசரஉவாச.

விஸ்தரேணப்ரவீம்யத்ர விஷ்ணோராஶ்ரயணக்ரியாம்।

தா-ம்.—ஸ்ரீபராசரமஹர்ஷி சொல்லுகிறார்.—ருஷிகளே! முன் சுருக்கமாகச்சொன்ன பகவதாஶ்ரயணத்தை இந்த அத்யாயத்தில் விஸ்தாரமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள். க.

ఉత్థాయ పశ్చిమే యామ ఆచమ్య ప్రయతాత్మవాన్॥ ౧.
నివేశితే శుచౌ దేశే సమాసీన స్సుఖాసనే।
ఆత్మానం స్వశరీరఞ్చ పరేశమనుచిన్తయేత్॥ ౨.

உத்தாயபஶ்சிமேயாம ஆசம்யப்ரயதாத்மவாந்॥ க.
நிவேசிதேசுசௌதேசே ஸமாஸீநஸ்ஸுகாஸநே।
ஆத்மாநம்ஸ்வசரீரஞ்ச பரேசமநுசிந்தயேத்॥ ௨.

தா-ம்.—இரவில் நான்காவது யாமத்திலெழுந்திருந்து கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு ஆசமநஞ்செய்து எறும்புமுதலிய புழுக்களில்லாமல் பரிசுத்தமாயிருக்கிற இடத்தில் ம்ருதுவாயிருக்கிற ஆஸநத்தையிட்டு அதிலுட்கார்ந்து மநஸ்ஸைப் பெண்டாட்டி பிள்ளை முதலிய விஷயங்களிற் செல்லாமற்படிசெய்து பின்பு தன்னையும் தன்னுடைய சரீரத்தையும் தனக்கு ஸ்வாமியான பரமாத்மாவையும் த்யாநம் செய்யக்கடவன். ௨.

சரீரத்தை த்யாநிக்கும் விதம் சொல்லுகிறது.

శుక్రశోణితసంభూతం శరీరం పాఞ్చభౌతికమ్।
శబ్దాదివిషయోపేతై ర్యుత మేకాదశేన్ద్రియైః॥ 3.
అవ్యక్తబుద్ధ్యహఙ్కారదశకార్యగుణైర్యుతమ్।
వసామూత్రపురీషాస్థిచర్మమాంససిరాయుతమ్॥ ౪.
ద్విషద్భిః కామకారాద్యై రనిశం పీడితాన్తరమ్।
తాపత్రయమహాజ్వాలవహ్నిభిః పరివేష్టితమ్॥ ౫.

ఈషణాత్రయతృష్ణాభి ర్నిబద్ధం మలపూరితమ్।
ద్వాసప్తతిసహస్రాభి ర్నాడీభిః పరివేష్టితమ్॥ ౬.

சுக்ரசோணிதஸம்பூதம் சரீரம்பாஞ்சபௌதிகம்|
சப்தாதிவிஷயோபேதம் யுதமேகாதசேந்த்ரியைஃ|| ௩.

அவ்யக்தபுத்யஹங்கார தசசார்யகுணைர்யுதம்|
வஸாமூத்ரபுரீஷாஸ்தி சர்மமாம்ஸஸிராயுதம்|| ௪.

த்விஷத்பிஃகாமகாராத்யை ரதிசம்பீடிதாந்தரம்|
தாபத்ரயமஹாஜ்வாலவஹ்நிபிஃ பரிவேஷ்டிதம்|| ௫.

ஈஷணாத்ரயத்ருஷ்ணாபிர் நிபத்தம்மலபூரிதம்|
த்விஸப்ததிஸஹஸ்ராபிர் நாடீபிஃபரிவேஷ்டிதம்|| ௬.

தா-ம்.—இந்தச் சரீரமானது சுக்ரமென்கிற புருஷனுடையவீர்யத்தினாலும், சோணிதமென்கிற ஸ்த்ரீயினுடைய ரஜஸ்ஸினாலுமுண்டானது. மண், ஜலம், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்கள் சேர்ந்து இவ்விதமாய் விகாரத்தை யடைந்திருக்கின்றன. இது த்வக், சக்ஷுஸ், ஶ்ரோத்ரம், ஜிஹ்வை, க்ராணம், என்கிற ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களும், வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம், என்கிற ஐந்து கர்மேந்த்ரியங்களும், மநஸ்ஸு என்கிற ஆந்தரிந்த்ரியமும் ஆகிய பதினொரு இந்த்ரியங்களோடுகூடியிருக்கிறது. த்வக் என்பது-வெம்மை குளிர்ச்சி முதலிய ஸ்பர்சங்களையறிகைக்கு ஹேதுவாய் சரீரமெங்கும் வ்யாபித்திருக்கும். சக்ஷுஸ் என்பது—வெண்மை, நீலம், முதலிய ரூபங்களை யறிகைக்கு ஸாதகமாய்க் கண்ணில் கருவிழியின் மத்தியிலிருக்கும், ஶ்ரோத்ரம் என்பது—சப்தத்தைக் கேட்கஸாதகமாய் செவிக்குள்ளிருக்கும். ஜிஹ்வை என்பது—தித்திப்பு, கைப்பு முதலிய ரஸங்களை யறிகைக்குக் காரணமாய் நாவின் நுனியிலிருக்கும். க்ராணம் என்பது—பரிமளம், துர்க்கந்தம் முதலியவைகளை யறிகைக்குக் காரணமாய் மூக்கின் நுனியிலிருக்கும். இவைவையைந்தும் அறிவுக்கு ஸாதகமாகையால் ஜ்ஞானேந்த்ரியங்களென்று சொல்லப்படுகின்றன. வாக் என்பது—வார்த்தை சொல்லுகைக்குக் காரணமாய் கடைவாய்முதலிய இடங்களிலிருக்கும். பாணி என்பது-ஒன்றை எடுத்தல், பிடித்தல்முதலியவை செய்கைக்கு ஹேதுவாய் இரண்டுகைகளின் தலங்களிலிருக்கும். பாதம் என்பது—நடக்கைக்கு ஹேதுவாய் இரண்டு பாதங்களிலிருக்கும். பாயு என்பது—மலத்

தை விடுகைக்கு ஹேதுவாய்க் குதத்திலிருக்கும். உபஸ்தமென்பது-ஸ்த்ரீபுருஷர்கள் ஒருவர்க்கொருவர் புணர்ந்து ஸுகத்தை யநுபவிக்கைக்கு ஸாதகமாய் ஆண் பெண் குறிகளிலிருக்கும். இவ்வைந்தும் செயலுக்குஸாதகமாகையால் கர்மேந்த்ரியங்களென்று சொல்லப்படுகின்றன. மநஸ்ஸு என்பது—எல்லாவறிவுக்கும் ஸாதகமாய்சரீரத்தினுள்ளே யிருக்கும். ஆகையால் இதற்கு ஆந்தரிந்த்ரியமென்று பெயர். இப்பதினொன்றும் தந்தம் வ்யாபாரத்தோடு கூடியதாய்இந்தச் சரீரத்தில் வஸிக்கின்றன. மூலப்ரக்ருதி, புத்தி என்கிற மஹத்தத்வம், அஹங்காரம், அஹங்காரதத்வத்தில் நின்று மூண்டான (சப்ததந்மாத்ரை, ஸ்பர்சதந்மாத்ரை, ரூபதந்மாத்ரை, ரஸதந்மாத்ரை, கந்ததந்மாத்ரை ஆகிய ஐந்து தந்மாத்ரைகள், ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம், ஆகிய ஐந்து பூதங்கள், இந்த) பத்து தத்வங்கள், ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம், ஆகிய மூன்று குணங்கள் இவைகளோடும் கூடியதாயிருக்கு மிந்தச் சரீரம், சவுந்நீர், மூத்ரம், விஷ்டை, எலும்பு, தோல், மாம்ஸம், நரம்பு, இவைகளோடும் கூடியிருக்கிறது. தனக்கு சத்ருக்களாகிற காமம் (ஒரு வஸ்துவில் ஆசை), க்ரோதம் (ஆசைப்பட்ட வஸ்துவை அகப்படாமல் செய்தவர்களிடத்திலுண்டான கோபம்), மோஹம் (செய்யவேண்டியவை செய்யத்தகாதவைகளை உள்ளபடி யறியாமை), லோபம் (அயலாருடைய பொருளை யாசைப்படல்), மதம் (தானே பெரியனென்கிற கர்வம்), மாத்ஸர்யம் (அயலார் மேன்மையைக்கண்டு பொறாமை), இவைகளினா லெப்போதும் நெருங்கிருக்கிறது. ஆத்யாத்மிகம் (சரீரத்தில் வாதம் பித்தம் ச்லேஷ்மம் இந்த தாதுக்களினுடைய உயர்வு தாழ்வுகளினாலுண்டான ஜ்வரம் முதலிய உபத்ரவம்), ஆதிபௌதிகம் (பாம்பு தேள் முதலானவைகளாலுண்டான உபத்ரவம்), ஆதிதைவிகம் (மின்னல் இடி முதலானவைகளினாலுண்டான உபத்ரவம்) என்கிற மூன்றுவிதமான தாபங்களாகிற பெரிய எரிச்சலோடு கூடிய மூன்றக்நிகளினால் நாலுபக்கங்களிலும் சூழப்பட்டிருக்கிறது. புத்ரேஷணை (பிள்ளையினிடத்திலாசை), வித்தேஷணை (தநத்திலாசை), லோகேஷணை (ஸ்வர்க்கம் முதலான லோகங்களிலாசை) என்கிற மூன்று ஈஷணைகளினால் நெருக்குண்டிருக்கிறது. அழுக்கினால் நிறைந்திருக்கிறது. எழுபத்தீராயிரம் நரம்புகளினால் சுற்றப்பட்டிருக்கிறது. என்று இவ்விதமாய் சரீரத்தின் நிஹீனதையையும் நஸ்வரதையையும், இதன் ஸம்பந்தம் ஆத்மாவையழித்து விடுமென்பதையும் நன்றாய் அநுஸந்திக்கக்கடவன். சு

ஆத்மாவை த்யாநிக்கும் விதம் சொல்லுகிறது.

హృత్పుణ్డరీకమధ్యేత్ర వసామి ప్రభయా జ్వలన్।
దేహేన్ద్రియమనఃప్రాణధీభ్యోఽన్యోఽనన్యసాధనః॥ ౭.

పఞ్చవింశాత్మకో నిత్యో మకారార్థస్సమాధిమాన్।
భగవచ్ఛేషభూతోఽహ మనన్యార్హోఽచితః పరః॥ ౮.

నిర్వికారో హ్యణు ర్నిత్యః ప్రకృతే రవ్యయః పరః।
అజడోఽవ్యక్తరూపశ్చ జ్ఞానానన్దస్వరూపభాక్॥ ౯.

ఏకరూపో వ్యాప్తిశీలః క్షేత్రీ క్షేత్రజ్ఞ ఏవ చ।
జ్ఞాతా కర్తా చ భోక్తా చ అహంప్రత్యయగోచరః॥ ౧౦.

అదాహ్యోఽక్లేద్యోఽచ్ఛేద్యో హ్యశోష్యోఽక్షర ఏవ చ।
ఏవం దేహేన్ద్రియాద్యన్య మాత్మానం సతతం స్మరేత్॥ ౧౧.

ஹ்ருத்புண்டரீகமத்யேத்ரவஸாமிப்ரபயாஜ்வலந்|
தேஹேந்த்ரியமநஃப்ராணதீப்யோக்யோநந்யஸாதநஃ|| எ.

பஞ்சவிம்சாத்மகோநித்யோ மகாரார்த்தஸ்ஸமாதிமாந்|
பகவச்சேஷபூதோஹ மநந்யார்ஹோசிதஃபரஃ|| அ.

நிர்விகாரோஹ்யணுர்நித்யஃ ப்ரக்ருதேரவ்யயஃபரஃ|
அஜடோவ்யக்தரூபஸ்ச ஜ்ஞாநாநந்தஸ்வரூபபாக்|| கூ,

ஏகரூபோவ்யாப்திசீலஃ க்ஷேத்ரீக்ஷேத்ரஜ்ஞஏவச|
ஜ்ஞாதாகர்த்தாசபோக்தாச அஹம்ப்ரத்யயகோசரஃ க0.

அதாஹ்யோக்லேத்யச்சேத்யோஹ்யசோஷ்யோக்ஷரஏவச|
ஏவம்தேஹேந்த்ரியாத்யந்யமாத்மாநம்ஸததம் ஸ்மரேத்|| கக.

தா-ம்.—இந்த ஹேயமான சரீரத்தில் மார்பின்நடுவில் தாமரைமொக்குபோலிருக்கிற மாம்ஸரூபமான அவயவத்தின் நடுவில் நான் வாஸம் பண்ணுகிறேன். ஹேயமாய் பருமனுய்க்காண்கிற இந்தச்சரீரம், இதைக்காட்டிலும் ஸூக்ஷ்மமான இந்த்ரியங்கள், மநஸ்ஸு, இவைகளொழிந்தகாலத்திலும் காண்கிறப்ராணன், புத்தி, இவைகளைக்காட்டிலும் வேறாய்த் தன்னுடைய ப்ரகாசத்திற்கு வேறொரு

ஸாதகம் வேண்டாமல் தீபம்போல் தனக்குத்தானே ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறேன், நான் ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், ஐந்து தந்மாத்ரைகள், ஐந்துபூதங்கள், பதினொரு இந்த்ரியங்கள் ஆகிய இருபத்துநாலு தத்வங்கள் கழிந்து இருபத்தைந்தாம் தத்வமாய், க-முதல் இருபத்தைந்தாவது அக்ஷரமான ம-என்கிற அக்ஷரத்தினால் சொல்லப்பட்டவனாய், (ஜ்ஞாநஸ்வரூபனாய்) உத்பத்தி விநாசமில்லாதவனாயிருக்கிறேன். பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கைக்கு யோக்யமான பக்தியோகத்தை யநுஷ்டிக்கைக்கு யோக்யதையுடையவன்; பகவானான ஸ்ரிய:பதிக்கே அடியன், வேறொருவனுக்கு அடிமைப்பட யோக்யனல்லன்; ஞானமில்லாத அசித்தைக்காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிறவன், அதெப்படியெனில்; அசித்து, சிறிதாகவும் பெரிதாகவும் பரிணமத்தை யடையும்; பெரிதாகக்காணும்; பிறக்கும்; அழியும்; மூலப்ரக்ருதியைக்காட்டிலும் கீழ்ப்பட்டிருக்கும்; ஜ்ஞாநமில்லாமலிருக்கும்; எல்லாராலும் காணக்கூடியதாய் ஜடமாயிருக்கும், பலவிதமாயிருக்கும்; ஒன்றால் வ்யாபிக்கப்பட்டிருக்கும், ஆத்மாவானநான் எப்போதும் ஏகரூபமாய், அணுவாய், பிறப்பிறப்பில்லாதவனாய், மூலப்ரக்ருதிக்கும்மேலாய், ஜ்ஞாநமுடையவனாய், எல்லாருக்கும் ஸ்பஷ்டமாகக்காணக்கூடாதவனாய்: ஜ்ஞாநாநந்தங்களையே ஸ்வரூபமாகவுடையவனாயிருக்கிறேன். பல்விதமின்றிக்கே மற்ற ஆத்மாக்கள்போல விருக்கின்றேன்; எல்லாவஸ்துக்களிலும் உள்ளே ப்ரவேசிக்க சக்தியுடையனாயிருக்கிறேன். நான் சரீரத்தையுடையவன். சரீரத்தை இது வென்றும் எனது என்றும் அறிகிறேன். அடையவேண்டும் பலத்தையும் அதற்குபாயத்தையுமறிந்து அவ்வுபாயத்தைச் செய்து அந்த பலத்தை யநுபவிக்கிறேன். அஹம் என்று நானே தோற்றுகிறேன். அழிவில்லாமைக்குக் காரணமென்னென்னில்; ஜலம், தீ, வாயு, ஆயுதம், இவைகளினால் நனைக்கவும் எரிக்கவும் வறட்டவும், வெட்டவும் செய்யத்தகாதவன். இவைகள் உள்ளே நுழைந்து தந்தம் கார்யங்களைச் செய்யவேணும்; ஆத்மா மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இதற்குள்ளே ப்ரவேசிக்க அவைகளுக்கு ஸாமர்த்யமில்லை. ஆகையாலழிவில்லை. என்று இவ்விதமாக தேக முதலியவைகளைக்காட்டிலும் வேறுபட்டவனாக ஆத்மாவை எப்போதும் த்யாநம் செய்யவேண்டும்.

ఇత్యాత్మానం దృఢం జ్ఞాత్వా స్వాత్మైకమనుచిన్తయేత్।
పరే బ్రహ్మణి పరేశానం తథా వ్యాపకభేదతః॥ ౧౨.

இத்யாத்மாநம் த்ருடம் ஜ்ஞாத்வா ஸ்வாத்மேசமநுசிந்தயேத்|
பரேவ்யோம்நிபரேசாநம்ததாவ்யூஹாதிபேதத:|| ௧௨.

தா-ம்.—இப்படி ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை நன்றாயறிந்து பின்பு தனக்கு ஸ்வாமியாய் ஸ்ரீவைகுண்டத்திலும் திருப்பாற்கடல் முதலிய வ்யூஹங்களிலும் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் நியாமகனாயெழுந்தருளியிருக்கிற பரமாத்மாவை த்யாநம் செய்யக்கடவன். ௧௨.

லீலா விபூதியை த்யாநிக்கும் விதம்.

అణ్డ మణ్డగతాన్ లోకాన్ తదన్తర్గతవిగ్రహాన్।
తదంశాంశసమూహం తదన్తర్యామిత్వ మాత్మనః॥ ౧౩.

దశోత్తరానావరణాన్ తదన్తస్థచరాచరాన్।
ప్రధానం పురుషంచైవ త్రిగుణం తత్ర సంభవమ్॥ ౧౪.

அண்டமண்டகதாங்லோகாந் ததந்தர்கதவிக்ரஹாந|
ததம்சாம்சஸமூஹம்த தந்தர்யாமித்வமாத்மந:|| ௧௩.

தசோத்தராநாவரணாந் ததந்தஸ்தசராசராந்|
ப்ரதாநம்புருஷம்சைவ த்ரிகுணம்தத்ரஸம்பவம்|| ௧௪

தா-ம்.—பகவானுடைய விபூதியான ப்ரஹ்மாண்டத்தையும், அதிலுள்ள ஸத்யலோகம் முதலிய பதினாலுலோகங்களையும், ஆஸ்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக அங்கங்கே எழுந்தருளியிருக்கிற அநிருத்தன் முதலிய அவதாரங்களையும், அவருடைய அம்ச பூதர்களான த்ருவன், தந்வந்த்ரி, ப்ருது, வாஸுகி, முதலியவர்களையும், அவைகளில் பரமாத்மா அந்தர்யாமியாய் வ்யாபித்திருப்பதையும், ஒன்றைக்காட்டிலுமொன்று பத்துமடங்கு அதிகமாய் அண்டத்தைச் சூழ்ந்திருக்கிற ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம், அஹங்காரம், மஹத், என்கிற ஏழு தத்வங்களையும், அண்டத்திலுள்ள பசு பக்ஷி முதலிய ஜங்கமங்களையும், மரம் கொடி மலை முதலிய ஸ்தாவரங்களையும், மூலப்ரக்ருதியையும், அதிலுள்ள ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்று குணங்களையும், அம்மூலப்ரக்ருதியிலழுந்தியிருக்கிற ஜீவன்களையும் த்யாநிக்கக்கடவன்.

நித்யவிபூதியை த்யாநிக்கும் விதம்.

తమసస్తుపరం శుద్ధం హిరణ్మయ మనామయమ్।
పరమం వైష్ణవం లోకం నిత్యానన్దసుఖావహమ్॥ ౧౫.

தமஸஸ்தத்பரம்சுத்தம்ஹிரண்மயமநாமயம்|
பரமம்வைஷ்ணவம்லோகம்நித்யாநந்தஸுகாவஹம்|| கரு.

தா-ம்.—மூலப்ரக்ருதிக்குமேல் சுத்தஸத்வமயமாய் ஸுவர்ணம் போல் ப்ரகாசித்துக்கொண்டு மிகவழகியதாய் ப்ரளயம்முதலிய உபத்ரவங்களின்றி ஸர்வோத்க்ருஷ்டமாய் எப்போதும் ஆநந்தத்தைவிளைக்குமதானஸ்ரீவைகுண்டமென்கிற ஸ்ரீவைஷ்ணவலோகத்தை த்யானிக்கக்கடவன்.

తత్రసంవాహినీం దివ్యాం విరజాం వేదసంభవామ్।
తత్ర శుద్ధం పరం వ్యోమ హ్యనన్త మమృతాహ్వయమ్॥ ౧౬.

నిర్మలం నిత్య మజడ మనన్తసుఖదం సుఖమ్।
తత్రస్థితా న్యనేకాని స్థానాని సుఖవన్తిచ॥ ౧౭.

తత్ర జానపదగ్రామనగరాణిమహాన్త్యపి।
సర్వే హిరణ్మయా స్తత్ర సర్వే వేదమయా శ్శుభాః। ౧౮.

అప్రాకృతతయా నిత్యాః పునరావృత్తివర్జితాః।

தத்ரஸம்வாஹிநீம்திவ்யாம்விரஜாம்வேதஸம்பவாம்|
தத்ரசுத்தம்பரம்வ்யோமஹ்யநந்தமம்ருதாஹ்வயம்|| கசு.

நிர்மலம்நித்யமஜடமநந்தஸுகதம்ஸுகம்|
தத்ரஸ்திதாந்யநேகாநிஸ்தாநாநிஸுகவந்திச|| கஎ

தத்ரஜாநபதக்ராமநகராணிமஹாந்த்யபி|
ஸர்வேஹிரண்மயாஸ்தத்ரஸர்வேவேதமயாஶ்ஶுபா:|| கஅ.

அப்ராக்ருததயாநித்யா:புநராவ்ருத்திவர்ஜிதா:|

தா-ம்.—மூலப்ரக்ருதிக்கப்பால் வேதபர்வதத்தில் நின்றுமுண்டாய்ப்பெருகுகிற விரஜை என்றுபெயரையுடைய ஶ்ரேஷ்டமான நதியை த்யாநிக்கக்கடவன். அதற்குமேல் தேஜோமயமாய், அளவில்லாமல் பரந்து மோக்ஷமென்று சொல்லப்படுகிற பரமாகாசமுண்டு. அதற்கு உத்பத்தி விநாசங்கள் முதலிய தோஷங்கள் கிடையாது. ஸ்வயம் ப்ரகாசமாய், அங்குள்ளவர்களுக்கு அபரிமிதமான ஸுகத்தையுண்டுபண்ணுகிறதாய் அத்யந்த மநுகூலமாயிருக்கும். அங்கு அநேகமான இடங்கள் ஸுகஜநகங்களாய் இருக்கின்றன, அங்கு தேசங்க

ருநும் ஊர்களும் பெரிய பட்டணங்களு மிருக்கின்றன. அங்குள்ள புருஷர்கள் எல்லாரும் ஸுவர்ணம்போல் ஸௌந்தர்யமுடையவர்களாய், எப்போதும் வேதாத்யயநம் பண்ணிக்கொண்டு சாந்தமூர்த்திகளாய், ப்ரக்ருதிஸம்பந்த மடியாகவந்த ஜநநமரண சூந்யராய், இஸ்ஸம்ஸாரத்தில் திரும்பி வராமல் அங்கே யிருந்து பகவதநுபவம் பண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் த்யாகிக்கக் கடவன். கஅ உ.

తన్మధ్యే నగరం దివ్యం వైకుణ్ఠం నామ నామతః॥ ౧౯.

చన్ద్రకాన్తమయై ర్నిత్యై ర్విమానై ర్బహుభి ర్వృతమ్।
సర్వవర్ణమయై స్సౌధై ర్నానారత్నైశ్చ శోభితమ్॥ ౨౦.

దివ్యరత్నమయై శ్శుభ్రైః ప్రాకారై ర్గోపురై ర్యుతమ్।
నానామణిమయై ర్దీప్రగృహపఙ్క్తిభి రావృతమ్॥ ౨౧.

శక్రచాపౌఘసఙ్కాశైః ప్రాగ్ర్యైస్సౌధైస్సముచ్ఛ్రితమ్।
వివస్వత్కోటిసఙ్కాశై స్తోరణై రుపశోభితమ్॥ ౨౨.

సుధాకరసహస్రాభైః పురుషై రుపశోభితమ్।
సర్వే చతుర్భుజా శ్శుద్ధా స్సర్వత్రేశ సమవిగ్రహాః॥ ౨౩.

శఙ్ఖచక్రధరా స్సర్వే స్రగ్విణః పీతవాససః।
అనురజ్యన్తి దేవేశం భక్త్యా భృత్యైర సేన వై॥ ౨౪.

ప్రాతరుద్యత్సహస్రాంశుకోటీశతసమప్రభాః।
సర్వే లక్షణసమ్పన్నాః పద్మహస్తాశ్చతుర్భుజాః॥ ౨౫

అనిశం భక్తిభిశ్శ్రీశ మర్చయన్తి చ కేశవమ్।
ఆరూఢయౌవనా స్సర్వే నార్యశ్చ పురుషా స్తథా॥ ౨౬.

தந்மத்யேநகரம்திவ்யம்வைகுண்டம்நாமநாமத:॥ க௯.

சந்த்ரகாந்தமயைர்நித்யைர்விமாநைர்பஹுபிர்வ்ருதம்।
ஸர்வவர்ணமயைஸ்ஸௌதைர்நாநாரத்நைஸ்சசோபிதம்॥ ௨0.

திவ்யரத்நமயைஶ்ஶுப்ரை: ப்ராகாரைர்கோபுரைர்யுதம்।
நாநாமணிமயைர்தீப்ரக்ருஹபங்க்திபிராவ்ருதம்॥ ௨க.

சக்ரசாபௌகஸங்காசை:ப்ராக்ரைஸ்ஸௌதைஸ்ஸமுச்ச்ரிதம்।
விவஸ்வத்கோடிஸங்காசை ஸ்தோரணைருபசோபிதம்॥ ௨௨.

ஸூதாகரஸஹஸ்ராபை: புருஷைருபசோபிதம்।
ஸர்வேசதுர் புஜாஸ்ஸூத்ராஸ்ஸ்வாத்மேச ஸமவிக்ரஹா:।
சங்கசக்ரதராஸ்ஸர்வே ஸ்ரக்விண: பீதவாஸஸ:॥ ௨௩.

அநுரஜ்யந்திதேவேசம் பக்த்யாப்ருத்யரஸேநவை।
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சுகோடிசதஸமப்ரபா:॥ ௨௪.

ஸர்வேலக்ஷண ஸம்பந்நா: பத்மஹஸ்தாஸ்சதுர்புஜா:।
அநிசம்பக்திபிஸ்ஸ்ரீச மர்ச்சயந்திசகேசவம்॥ ௨௫.

ஆரூடயௌவநாஸ்ஸர்வே நார்யஸ்சபுருஷாஸ்ததா।
மோதந்தேபரமேவ்யோம்நி சாச்வதேப்ரபுகிங்கரா:॥ ௨௬.

தா-ம்.—அந்ததேசத்தில் ஸ்ரீவைகுண்டமென்று ஒரு பட்டணமுண்டு. அங்கு சந்த்ரகாந்த மணிகளிழைத்த விமாநங்களும், உயர்ந்த ரத்நங்களினால் கட்டப்பட்ட கோபுரங்களும் ப்ராகாரங்களும், பலவிதமான மணிகளிழைத்து விசித்திரமாய் அநேகமான இந்த்ர தநுஸ்ஸூக்கள் கூடினாற்போலிருக்கிற உப்பரிகைகளும், ஒரேகாலத்தில் கோடி ஸூர்யர்களுதித்தாற்போல் விளங்காநின்றகோபுரதுவாரங்களும் சூழ்ந்துவிளங்குகின்றன. அங்குள்ள புருஷர்களெல்லாம் அநேக சந்த்ரனோடொத்த காந்தியுடையவர்களாய், பரமாத்மாவைப்போல் நாலு திருக்கைகளையுடையவர்களாய், சங்கம் சக்ரம் வநமாலை பீதாம்பரங்களை யணிந்தவர்களாய், பக்தியுடன் கைங்கர்யம் செய்து பரமாத்மாவை ஆநந்திப்பிக்கிறார்கள். அங்குள்ள ஸ்த்ரீகளும் அப்போதுஉதயமான அநேகங்கோடி ஸூர்யர்கள்போன்ற காந்தியையுடையவர்களாய், ஸர்வலக்ஷணங்களையுமுடையவர்களாய், தாமரைப்பூக்களை நான்கு திருக்கைகளிலுமுடையவர்களாய், ஸ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனை அத்யந்த பக்தியுக்தராய் ஆராதிக்கிறார்கள். ஸ்த்ரீகளும் புருஷர்களும் எப்போதும் யௌவநத்தையுடையவர்களாய்த் தங்கள் ஸ்வாமியான பரமாத்மாவுக்குக் கைங்கர்யத்தைச்செய்து கொண்டு ஆநந்தித்திருக்கிறார்கள். ௨௨-௭.

మోదన్తే పరమే వ్యోమ్ని శాశ్వతే ప్రభుకింకరాః।
తన్మధ్యే మన్దిరం దివ్యం ప్రాసాద శతసఙ్కులమ్ ॥ ౨౮.

మణిప్రాకార సంశోభి చతుర్ద్వార సమన్వితమ్ ।
చణ్డాది ద్వారపాలైశ్చ కుముదాద్యైశ్చ రక్షితమ్॥ ౨౮.
నానా రత్నమయైర్దివ్యై ర్గృహముఖ్యై స్సుశోభితమ్।

தந்மத்யேமந்திரம்திவ்யம் ப்ராஸாதசதஸங்குலம்|
மணிப்ராகாரஸம்சோபி சதுர்த்வாரஸமந்விதம்|| உஎ.
சண்டாதித்வாரபாலைஶ்ச குமுதாத்யைஶ்சரக்ஷிதம்,
நாநாரத்நமயைர்திவ்யைர் க்ருஹமுக்யைஸ்ஸுசோபிதம். உஅ.

தா-ம்.—அந்த ஸ்ரீ வைகுண்டமென்கிற திவ்யநகரத்தின் மத்தியில் அநேக மண்டபங்கள், ரத்நங்களிழைத்தப்ராகாரங்கள் இவைகளோடுகூடியதாய், நாலுகோபுரத்வாரங்களையுடைய கோயிலிருக்கிறது. அந்தக்கோயிலை + சண்டன் முதலிய த்வாரபாலர்களும் ‡ குமுதன் முதலியவர்களும் ரக்ஷிக்கிறார்கள். அதின் நடுவில் அநேகவிதமானரத்நங்களிழைத்த மாளிகைகள் இருக்கின்றன. உஅ.

మధ్యే మణిమయం దివ్యం సహస్రస్తమ్భసంయుతమ్॥ ౨౯.
నానారత్నవితానౌఘై శ్చిత్రితం సుసుఖాస్పదమ్ ।
దివ్య చన్దన కర్పూరైః కుఙ్కుమాద్యై స్సుశోభితమ్ ॥ 30॥
దివ్యా ప్సరోగణైర్నిత్యై స్సేవితం సతతంశుభైః ।

மத்யேமணிமயம்திவ்யம் ஸஹஸ்ரஸ்தம்பஸம்யுதம்|
நாநாரத்நவிதாநௌகை ஶ்சித்ரிதம்ஸுஸுகாஸ்பதம்|| உகூ.
திவ்யசந்தநகர்பூரைঃ குங்குமாத்யைஸ்ஸுசோபிதம்|
திவ்யாப்ஸரோகணைர்நித்யை ஸ்ஸேவிதம்ஸததம்சுபை:|| ௩0.

தா-ம்.—அந்தமாளிகைகளின் மத்தியில் ரத்நங்களினால் கட்டப்பட்டு ஆஶ்சர்யகரமாய், ஆயிரம்கால்களையுடையதாய், அநேகவிதமான மணிகளினால் செய்யப்பட்ட மேற்கட்டுகளினால் விசித்ரமாய், மிகவு மாநந்தஜநகமான மண்டபமிருக்கிறது. அது ஶ்ரேஷ்டமான சந்தனம் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ முதலிய வாஸனைத்ரவ்யங்களினால் பரிமளித்துக்கொண்டிருக்கிறது. அங்கு ஸர்வாலங்கார பூஷிதைகளாய் அழகான அப்ஸர ஸ்த்ரீகள்எப்போதும் வாஸம்பண்ணுகிறார்கள். ௩0.

+ சண்டன், ப்ரசண்டன், பத்ரன், ஸுபத்ரன், ஜயன், விஜயன், தாதா, விதாதா, இவர்களெண்மரும் த்வாரபாலர்கள்.

‡ குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமநன் சங்குகர்ணன், ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டன், இவர்கள் கணாதிபர்கள்.

మధ్యే సింహాసనం దివ్యం ధర్మాద్యైస్సూరిభిర్వృతమ్॥ 3౧.
వేదత్రయమయం దివ్యం సాఙ్గోపాఙ్గపరిచ్ఛదమ్।
తన్మధ్యేఽష్టదళం పద్మమష్టాక్షరమయం పరమ్॥ 3౨.
అకారః కర్ణికా తత్ర స్వరవ్యఞ్జనసంయుతః।

மத்யேஸிம்ஹாஸநம்திவ்யம் தர்மாத்யைஸ்ஸூரிபிர்வ்ருதம்|
வேதத்ரயமயம்திவ்யம் ஸாங்கோபாங்கபரிச்சதம்|| ௩௧.
தந்மத்யேஷ்டதளம்பத்ம மஷ்டாக்ஷரமயம்பரம்|
அகாரஃகர்ணிகாதத்ர ஸ்வரவ்யஞ்ஜநஸம்யுதஃ|| ௩௨.

தா-ம்.---அந்தமண்டபத்தின் மத்தியில் மூன்று வேதஸ்வரூபமாய், ஸமஸ்தாவயவங்களினாலும் ஸமஸ்தாலங்காரங்களினாலும் பரிபூர்ணமாய், * தர்மம் முதலிய நித்யஸூரிகளினால் சூழப்பட்ட அத்புதமான ஸிம்ஹாஸநமிருக்கிறது. அதின்நடுவில் ஸ்ரீமதஷ்டாக்ஷரஸ்வரூபமாய் ஸர்வோத்க்ருஷ்டமாய் எட்டு இதழ்களையுடைய கமலமிருக்கிறது. அதின்நடுவில் அச்சு ஹல்லு இந்த அக்ஷரங்களாகிறதாதுகளோடுகூடிய அகாரஸ்வரூபமான கர்ணிகை யிருக்கிறது. ௩௧௨.

తస్మిన్ననన్తపర్యఙ్కే ఫణారత్నవిచిత్రితే॥ 33.
ధ్యాయేన్నివిష్టమాత్మేశమీశ్వర్యా జగత్శ్రియా।
ఇన్దీవరదళశ్యామం పద్మపత్రనిభేక్షణమ్॥ 3౪॥
శ్లక్ష్ణనాసం లసద్గణ్డం సుభ్రూవల్లియుగాన్వితమ్।
ప్రాతరుద్యత్సహస్రాంశుప్రాయకుణ్డలశోభితమ్॥ 3౫.
సంపూర్ణచన్ద్రప్రతిమస్మితయుక్తశుభాననమ్।
మహాహనుం ప్రోన్నతాంసం దీర్ఘబాహుచతుష్టయమ్॥ 3౬.
మహోరస్కం స్నిగ్ధవర్ణం కోమలావయవోజ్జ్వలమ్।
సుస్నిగ్ధనీలకేశాన్తమస్తరాకబరీకృతమ్॥ 3౭.
శఙ్ఖచక్రగదాఖడ్గశార్ఙ్గాద్యైరాయుధైర్వృతమ్।
అర్కబిమ్బసహస్రాభకిరీటేన విరాజితమ్॥ 3౮.

* தர்மம், ஜ்ஞாநம், வைராக்யம், ஐஶ்வர்யம், அதர்மம், அஜ்ஞாநம், அவைராக்யம, அநைஶ்வர்யம், இந்த எண்மரும் திவ்யஸிம்ஹாஸநத்தின் கால்கள்.

దివ్యచన్దనలిప్తాఙ్గం పీతవస్త్రం శుభాహ్వయమ్ ॥
యువాకుమారం దివ్యాఙ్గం శుద్ధసత్వమనోహరమ్ ॥ ౩౯.

కౌస్తుభోద్భాసితోరస్కం వనమాలావిభూషితమ్ ।
కేయూరహారకటకనూపురాద్యైరలఙ్కృతమ్ ॥ ౪౦.

స్నిగ్ధరక్తారవిన్దాభపాదహస్తామ్బుజాన్వితమ్ ।
కన్దర్పకోటిలావణ్య జగన్మోహనవిగ్రహమ్ ॥ ౪౧.

సమానోత్కృష్టరహితం రూపౌదార్యగుణాదిభిః ।
ప్రాతరుద్యత్సహస్రాంశు సదృశా స్వేనతేజసా ॥ ౪౨.

తస్యైవ సదృశీదేవీ శీలరూపగుణాదిభిః ।
సర్వలక్షణసంపన్నా సర్వాభరణభూషితా । ౪౩.
సుధాబ్ధిఫేనసఙ్కాశ దివ్యవస్త్రేణ శోభితా ॥
సుస్నిగ్ధనీలకుటిలకేశభారైస్సుశోభితా ॥ ౪౪.

చతుర్భుజైర్విరాజన్తీ కేయూరాఙ్గదభూషణైః ।
హేమపద్మం మాతులుఙ్గముద్వహన్తీ కరద్వయే ॥ ౪౫.

ఇతరాభ్యాం వహన్తీ సా భర్తుః పాదామ్బుజద్వయమ్ ।
ఏవంభూమిశ్చ నీళాచ పార్శ్వయోస్సముపస్థితే ॥ ౪౬.

గృహీతచామరా దివ్యాశ్శక్త్యోఽష్టదళేషుచ ।
విమలోత్కర్షిణీ జ్ఞానా క్రియా యోగా తథైవచ ॥ ౪౭.

ప్రహ్వీ సత్యా తథేశానా మహిష్యస్సముపస్థితాః ।
ఏవంవైకుణ్ఠనాథోఽసౌ రాజతే పరమేపదే ॥ ౪౮.

సేవ్యమానస్సదానిత్యైర్ముక్తైర్భోగపరాయణైః ।
ఏవం విచిన్తయేన్నిత్యంపరే వ్యోమ్ని మహేశ్వరమ్ ॥ ౪౯.

தஸ்மிந்நநந்தபர்யங்கே பஞ்ஜரத்நவிசித்ரிதே|| ௫௫.
த்யாயேந்நிவிஷ்டமாத்மேச ஸ்ரீபூர்யாஜகதம்பரியா|

இந்தீவரதளஶ்யாமம் பத்மபத்ரநிபேக்ஷணம்|| கச.

ஶ்லக்ஷ்ணநாஸம்லஸத்கண்ட ஸுப்ரூவல்லியுகாந்விதம்|
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சு ப்ராயகுண்டலசோபிதம்|| கரு.

ஸம்பூர்ணசந்த்ரப்ரதிம ஸ்மிதயுக்தசுபாநநம்|
மஹாஹநும்ப்ரோந்நதாம்ஸம் தீர்க்கபாஹுசதுஷ்டயம்|| கசு.

மஹோரஸ்கம்ஸ்நிக்தவர்ணம் கோமலாவயவோஜ்வலம்|
ஸுஸ்நிக்தநீலகேசாந்த மந்தராகபரீக்ருதம்|| கஎ.

சங்கசக்ரகதாகட்க சார்ங்காத்யைராயுதைர்யுதம்|
அர்க்கபிம்பஸஹஸ்ராப கிரீடேநவிராஜிதம்|| கஅ.

திவ்யசந்தநலிப்தாங்கம் பீதவஸ்த்ரம் சுபாஹ்வயம்|
யுவாகுமாரம்திவ்யாங்கம் சுத்தஸத்வமநோஹரம்|| ககூ.

கௌஸ்துபோத்பாஸிதோரஸ்கம் வநமாலாவிபூஷிதம்|
கேயூரஹாரகடக நூபுராத்யைரலங்க்ருதம்|| சய.

ஸ்நிக்தரக்தாரவிந்தாப பாதஹஸ்தாம்புஜாந்விதம்|
கந்தர்பகோடிலாவண்ய ஜகந்மோஹநவிக்ரஹம்|| சக.

ஸமாநோத்க்ருஷ்டரஹிதம் ரூபௌதார்யகுணாதிபிஃ|
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சு ஸத்ருசாஸ்வேநதேஜஸா|| சஉ.

தஸ்யைவஸத்ருசீதேவி சீலரூபகுணாதிபிஃ|
ஸர்வலக்ஷணஸம்பந்நா ஸர்வாபரணபூஷிதா|| சக.

ஸுதாப்திபேநஸங்காச திவ்யவஸ்த்ரேணசோபிதா|
ஸுஸ்நிக்தநீலகுடில கேசபாரைஸ்ஸுசோபிதா|| சச.

சதுர்புஜைர்விராஜந்தீ கேயூராங்கதபூஷணைஃ|
ஹேமபத்மம் மாதுலுங்க முத்வஹந்தீகரத்வயே|| சரு.

இதராப்யாம் வஹந்தீஸா பர்துஃ பாதாம்புஜத்வயம்|
ஏவம்பூமிஸ்சநீளாச பார்ச்வயோஸ்ஸமுபஸ்திதே|| சசு.

க்ருஹீதசாமராதிவ்யாஶ் ஶக்தயோஷ்டதளேஷுச|
விமலோத்கர்ஷிணீ ஜ்ஞாநா க்ரியாயோகாததைவச|| சஎ.

ப்ரஹ்வீஸத்யாததேசாநா மஹிஷ்யஸ்ஸமுபஸ்திதாஃ|
ஏவம் வைகுண்டநாதோ ஸௌ ராஜதே பரமேபதே|| சஅ.

ஸேவ்யமாநஸ்ஸதா நித்யைர் முக்தைர்போகபராயணை:|
ஏவம் விசிந்தயேந்நித்யம் பரேவ்யோம்நி மஹேஸ்வரம்| சகூ.

தா-ம்.—அந்தக்கர்ணிகையின் மத்தியில் திருவநந்தாழ்வான் தன் படங்களிலுள்ள மணிகளின் காந்தியினால் விசித்ரமான அழகை யுடையவராய் எழுந்தருளியிருக்கிறார். அந்தத் திருவநந்தாழ்வானாகி ற படுக்கையின்மேல் தனக்குப்பத்நியான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன்கூட எழுந்தருளியிருக்கிறஜகதீஸ்வரனை, ஸ்ரீமந்நாராயணனை த்யாநம் செய்யக்கடவன். அந்த ஸர்வேஸ்வரன் தாமரைப்பூவினிதழ்போல் நீண்டழகிய திருக்கண்களையும், அழகிய நீண்டமூக்கையும், அழகிய கபோலத்தையும், கொடிபோன்ற புருவத்தையும், பூர்ணசந்த்ரன் போல் வெளுத்த புன்சிரிப்பையுடைய திருமுகமண்டலத்தையும், நீண்டு பருத்திருக்கிற தாடையையும், உயர்ந்த தோள்களையும், நீண்டநான்கு திருக்கைகளையும், விசாலமாய் உயர்ந்திருக்கிற திரு மார்பையும், ம்ருதுவான மற்ற அவயவங்களையுமுடையவராய், ம்ருது வாய் கறுத்து உள்ளே சொருகப்பட்டிருக்கிற மயிர் முடியையுடைய வராய், சங்கம், சக்ரம், கதை, கத்தி, தநுஸ்ஸு, இவைமுதலிய ஆயு தங்களையும், ஆயிரம் பாலஸூர்யர்களுக்கு ஸமாநமான காந்தியை யுடைய குண்டலம், ஆயிரம் ஸூர்யர்களோடொத்த கிரீடம், பீதாம் பரம், கௌஸ்துபமணி, வநமாலை, தோள்வளை, முத்துமாலை, தோ டா, அரைநூல்மாலை, இவைமுதலிய திருவாபரணங்களையுமணிந்து, உத்தமமான சந்தநத்தினால் பரிமளித்துக்கொண்டு யௌவநாவஸ் தையையும் கௌமாராவஸ்தையையு முடையதாய், சுத்தஸத்வமய மாய் அத்புதமாய் அழகாய் கரிநெய்தலினிதழ்போல் ஶ்யாமமாய், கோடிமந்மதன்போன்ற லாவண்யத்தையுடையதாய் ஜகத்தைமோ ஹிப்பியாநின்ற திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவராய் எழுந்தரு ளியிருக்கிறார். ஸௌந்தர்யம், ஔதார்யம் முதலான குணங்களில் இவருக்கொத்தாரும் மிக்காருமில்லை; இவர் அபரிமிதமான குணங்க ளையும், பாலஸூர்யன்போன்ற தேஜஸ்ஸையுமுடையவர். ஸ்ரீமஹால க்ஷ்மியும், ஸௌந்தர்யத்தினாலும் மற்றகுணங்களினாலும் ஸ்ரீமந்நாரா யணனோடொத்தவளாய், ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணையாய், ஸம ஸ்தமான ஆபரணங்களையும், திருப்பாற்கடல்நுரைபோல் வெளுத்து ஶ்ரேஷ்டமாயிருக்கிற திருப்பரியட்டத்தையுமணிந்து, கறுத்து சுரு ண்டு அழகியதாயிருக்கிற மயிர்களினாலும், தோள்வளை பஹுமுத லிய பூஷணங்களணிந்த நான்கு திருக்கைகளினாலும் ஶ்ரேஷ்டமான

சோபையையுடையளாய். ஒரு திருக்கையில் ஸுவர்ணமயமான தாமரஸ புஷ்பத்தையும், மற்றொருதிருக்கையில் வில்வத்தையும்தரித்து, மற்ற இரண்டுதிருக்கைகளினால்தன்பதியான ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அவருடன்கூட அந்தத் திருவநந்தாழ்வான் மேலே எழுந்தருளியிருக்கிறாள். இவ்விதமாகவே பூமிதேவியும் நீளாதேவியும் எம்பெருமானுடைய இரண்டு பக்கங்களிலுமெழுந்தருளியிருக்கிறார்கள். மற்றமஹிஷிகளும் பக்கங்களிலெழுந்தருளியிருக்கிறார்கள். ஆஸநகமலத்தில் எட்டு இதழ்களிலும் விமலை, உத்கர்ஷிணி, ஜ்ஞானை, க்ரியை, யோகை, ப்ரஹ்வீ, ஸத்யை, என்ற எட்டு சக்திகள் நின்று சாமரம் வீசுகின்றார்கள். நித்யரும் முக்தரும் பரமாநந்த யுக்தராய் எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்கிறார்கள். இவர்களையெல்லாம் இவ்விதமாகவே த்யாநம் செய்யக்கடவன். ௪௯.

తస్యైవ వ్యూహభేదాశ్చ విభవార్చాదిమూర్తయః ।
హిరణ్మయాభ్యాం హస్తాభ్యాం శుద్ధాభ్యాం ప్రవిరాజితాః ॥ ౫౦.

தஸ்யைவவ்யூஹபேதாஸ்ச விபவார்ச்சாதிமூர்த்தய:|
ஹிரண்மயாப்யாம் ஹஸ்தாப்யாம் சுத்தாப்யாம் ப்ரவிராஜிதா:॥ ௫௦.

தா-ம்.—அந்தப்பரவாஸுதேவனுடைய (அநிருத்தன் கேசவன் முதலிய) வ்யூஹாவதாரங்களும், (பரசுராமன் முதலிய) ஆவேசாவதாரங்களும், (மத்ஸ்யம், கூர்மம் முதலிய) விபவாவதாரங்களும், (அழகிய மணவாளன்முதலிய) அர்ச்சாவதாரங்களும் ஸுவர்ணம்போலழகியதாய் நிர்மலமாயிருக்கிற இரண்டு திருக்கைகளையுடையவர்களாய் அந்தலோகத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள்.

శఙ్ఖచక్రగదాఖడ్గశార్ఙ్గలాఙ్గలముద్గరాః ।
పరితః పురుషాకారా రక్షన్తి హరిమన్దిరమ్ ॥ ౫౧.

சங்கசக்ரகதா கட்க சார்ங்கலாங்கல முத்கரா:|
பரித : புருஷாகாரா ரக்ஷந்திஹரி மந்திரம்|| ௫௧.

தா-ம்.—சங்கம், சக்ரம், கதை, கட்கம், (கத்தி) சார்ங்கம் (தநுஸ்ஸு), கலப்பை, உலக்கை, இந்த ஆயுதங்கள் புருஷஸ்வரூபத்தை யெடுத்துக்கொண்டு பகவந் மந்திரத்தைச் சுற்றும் ரக்ஷிக்கிறார்கள்.

வ்யூஹம் முதலிய அவதாரங்கள் எழுந்தருளியிருக்கும் ஸ்தாநம்.

తస్యవైకుణ్ఠనాథస్య ప్రాచ్యాం శుభతరో విభోః ।
వాసుదేవస్య విమలో లోకో వైశ్వానరప్రభః ॥ ౫౨.

தஸ்யவைகுண்ட நாதஸ்ய ப்ராச்யாம் சுபதரோவிபோ:|
வாஸுதேவஸ்யவிமலோ லோகோவைச்வாநரப்ரப:|| ௫௨.

தா-ம்.—அந்த ஸ்ரீவைகுண்டநாதனுடைய கோயிலுக்குக்கிழக்குத்திக்கில் மங்களகரமாய், சுத்தஸத்வமயமாய், அக்நிபோல் காந்தியையுடைத்தான வாஸுதேவனுடைய கோயில் இருக்கிறது. ௫௨.

దక్షిణే తస్య విమలో దివ్యస్సఙ్కర్షణాలయః ।
పశ్చిమే తస్య పూజ్యస్తు శుభంప్రద్యుమ్నమన్దిరమ్ ॥ ౫౩.

தக்ஷிணே தஸ்யவிமலோ திவ்யஸ்ஸங்கர்ஷணாலய:|
பஶ்சிமேதஸ்யபூஜ்யந்து சுபம்ப்ரத்யும்நமந்திரம்|| ௫௩.

தா-ம்.—ஸ்ரீவைகுண்டநாதன் கோயிலுக்குத்தெற்குத்திக்கில் சுத்தஸத்வமயமாய்ஆஶ்சர்யகரமான ஸங்கர்ஷணன்கோயில் இருக்கிறது. மேற்குதிக்கில் சுபகரமாய் கொண்டாடத்தகுந்ததான ப்ரத்யும்நன் கோயில் இருக்கிறது. ௫௩.

ఉదీచ్యామనిరుద్ధస్య లోకః కోటీన్దుసన్నిభః ।
ఈశాన్యాం కాన్తినిలయ ఆగ్నేయ్యాం లక్ష్మీమన్దిరమ్॥ ౫౪.

உதீச்யாமநிருத்தஸ்ய லோக: கோடீந்து ஸந்நிப:|
ஈசாந்யாம் காந்திநிலய ஆக்நேய்யாம் லக்ஷ்மிமந்திரம்|| ௫௪.

தா-ம்.—ஸ்ரீவைகுண்டநாதன் கோயிலுக்கு வடக்குதிக்கில் கோடிசந்த்ரனையொத்த காந்தியையுடையதான அநிருத்தன்கோயிலும், ஈசாந்ய (வடகிழக்கு) மூலையில் (அநிருத்தனுடைய பத்நியான) காந்திதேவியின்கோயிலும்,அக்நி (தென்கிழக்கு) மூலையில் (வாஸுதேவனுடைய பத்நியான)லக்ஷ்மீதேவியின் கோயிலும் இருக்கின்றன. ௫௪.

సారస్వతన్తు నైరృత్యాం వాయవ్యాం రతిమన్దిరమ్ ।
ఇదమావరణం తస్య ప్రథమం పరమస్య వై ॥ ౫౫.

ஸார்ஸ்வதந்துநைர்ருத்யாம் வாயவ்யாம்ரதிமந்திரம்|
இதமாவரணம்தஸ்ய ப்ரதமம்பரமஸ்யவை|| ௫௫.

தா-ம்.—நைர்ருதி (தென்மேற்கு) மூலையில் (ஸங்கர்ஷணனுடையபத்நியான) ஸரஸ்வதிதேவியின் கோயிலும், வாயு (வடமேற்கு) மூலையில் (ப்ரத்யும்நனுடைய பத்நியான) ரதிதேவியின் கோயிலும் இருக்கின்றன. இவைகள் ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் முதல்ப்ராகாரத்திலிருக்கின்றன. ௫௫.

ద్వితీయావరణం తస్య వైకుణ్ఠస్య శుభోన్నతమ్।
అనన్తసత్యధామాఖ్య విష్వక్సేన గజాననాః॥ ౫౬.
శఙ్ఖపద్మనిధీ తార్క్ష్యో లోకా నిత్యం సుఖప్రదాః।

த்விதீயாவரணம்தஸ்ய வைகுண்டஸ்யசுபோந்நதம்|
அநந்தஸத்யதாமாக்ய விஷ்வக்ஸேநகஜாநநா:॥ ௫௬.
சங்கபத்மநிதீதார்க்ஷ்யோ லோகாநித்யம்ஸுகப்ரதா:|

தா-ம்.—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் மங்களகரமான இரண்டாவது ப்ராகாரத்தில் அநந்தன், ஸத்யதாமன், விஷ்வக்ஸேநர், கஜாநநன்; சங்கநிதி, பத்மநிதி, கருத்மான், இவர்களுடைய ஸுககரங்களான கோயில்களிருக்கின்றன. ௫௬௨.

తృతీయావరణం తస్య కేశవాదిమమూర్తిభిః। ౫౭.

த்ருதீயாவரணம்தஸ்ய கேசவாதிமமூர்த்திபி:| ௫௭.

தா-ம்—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் மூன்றுவது ப்ராகாரத்தில் கேசவன் முதல் தாமோதரனளவான பன்னிரண்டு திருநாமங்களின் கோயில்களிருக்கின்றன. ௫௭.

అధిష్ఠితా దివ్యలోకా స్తత స్సఙ్కర్షణాదిభిః।

அதிஷ்டிதாதிவ்யலோகா ஸ்ததஸ்ஸங்கர்ஷணாதிபி:|

தா-ம்.—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் நான்காவது ப்ராகாரத்தில் முதல்ப்ராகாரத்திற்சொன்ன ஸங்கர்ஷணன் முதலியவர்களின் கோயில்களிருக்கின்றன. ௫௭௨.

మత్స్యః కూర్మో వరాహశ్చ నారసింహోఽథ వామనః। ౫౮.
జామదగ్న్యో దాశరథిః కృష్ణశ్చైవ సురేశ్వరః।
దధిభక్తో హయగ్రీవః షష్ఠమావరణే స్థితాః॥ ౫౯.

అధిష్ఠితా దివ్యలోకా స్సతతం విభవైశ్చతైః ।

மத்ஸ்யஃகூர்மோவராஹஶ்ச நாரஸிம்ஹோதவாமநஃ॥ ருஅ.
ஜாமதக்ந்யோதாசரதிஃக்ருஷ்ணஶ்சைவஸுரேஶ்வரஃ।

ததிபக்தோஹயக்ரீவஃ பஞ்சமாவரணேஸ்திதாஃ॥ ருகூ.
அதிஷ்டிதாதிவ்யலோகா ஸ்ஸததம்விபவைஶ்சதைஃ।

